Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

IIS இன் கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003
விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்
விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2002
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 18 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 28 (04.12.2002) புதன்கிழமை இதழ் : 64

விண்ணாணம் விநாசியர்



ஹக்கீம் காட்டின வழியிலதான் அதாவுல்லாவும் போறது, காலத்தின்ர கோலந்தான்...

# பிரபா கருத்தின் அடிப்படையே இறுதித் தீர்வாக வேண்டும்!



ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருணா, பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோர்.

## கனடா சுயாட்சி அமைப்பின் பரிசீலனைக்குப் பின் பாலா

(ஒஸ்லோ)

தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்ட சுயநிர்ணய அடிப்படையிலேயே, அரசியல் தீர்வுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்படும் என நேற்று ஒஸ்லோவில் நடைபெற்ற பேச்சுக்களில் - கனடா நாட்டின் சுயாட்சித் திட்டத்தை பரிசீலனை செய்தபின் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அரசாங்கத் தரப்பிடம் தெளிவாக எடுத்துரைத்தார்.

## கனேடிய விசேட குழு சமஷ்டி பற்றி விளக்கம்

(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் தற்போது நடைபெற்றுவரும் அரசு - புலிகள் மூன்றாம் சுற்று பேச்சுக்களின்போது கனடா நாட்டின் சமஷ்டி முறையிலான அரசு குறித்துப் பேசப்பட்டது. கனடாவின் அரசசார்பற்ற அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரும் ஒன்ராறியோ மாநில முன்னாள் முதல்வருமான பொப் ரெய், கனேடிய சமஷ்டி அரசமைப்பு குறித்து இரு தரப்பினருக்கும் விளக்கமளித்தார்.

ஆங்கிலம் பேசும் மேற்கு கனடாவும் பிரெஞ்மொழி பேசும் கிழக்கு கனடாவும் எவ்வாறு தம் அதிகாரங்களை இந்த சமஷ்டி அமைப்பின் கீழ் பகிர்ந்துள்ளன என்பது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பார்வையாளர் நிலையில் முஹைதீன் ஆலோசகர்கள் அடுத்த அறையில்

(ஒஸ்லோ)

நோர்வேயிலுள்ள மிகப் பெரிய விடுதியான ரடிசன் பிளாஸாவில் கிங் சூட் மண்டபத்தில் அரசு - புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் குழுக்களுக்கு இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தப் பேச்சுக்களில் இரு தரப்பிலும் ஆலோசகர்களாக கலந்துகொள்பவர்கள் - பேச்சு நடைபெறும் மண்டபத்துக்கு அருகிலுள்ள அறையில் தங்கியுள்ளனர். அவ்வப்போது, இவர்கள் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்

இதேவேளை, பேச்சுக்களில் கலந்துகொள்ளச் சென்று, இடையில் கட்சிப் பிளவுகளால் நாடு திரும்பியுள்ள அமைச்சர் ஹக்கீமுக்குப் பதிலாக, பேச்சுக்களில் கலந்துகொள்ளும் முஹைதீன் பார்வையாளர் நிலையிலேயே கலந்து கொள்கின்றார்.

## பிராந்திய அமைப்பாக காவல்துறை மாறும்!

தமிழீழ விடுதலைப் புலிகளால் அமுலாக்கப்பட்டுள்ள சட்டமும் ஒழுங்கும், தொடர்ந்தும் புலிகளின் பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது சட்டம் ஒழுங்கு நீடிக்கப்படமாட்டாது.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தத்துவாசிரியரும், அரசியல் ஆலோசகருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் - நேற்று நடைபெற்ற பேச்சக்களின் நடுவே மதிய போசன இடைவேளையின் போது - செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நிலைப்பாடு குறித்து எவரும் குழம்பத் தேவையில்லை

(ஒஸ்லோ)

நாம் அரசியல் விடுதலைக்காகவும் எம்மக்களுக்கான நாட்டைப் பெறவுமே போராடினோம். அரசு இவற்றிற்கு மாற்றீடான தீர்வை முன்வைத்தால் நாம் அதை பரிசீலிக்கலாம். கடந்த 20 வருடங்களாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இதுதான். புலிகளின் ஆலோசகராக இருக்கும் நான், இதைத்தான் 20 வருடங்களாக கூறுகிறேன். தலைவர் பிரபாகரன் - மாற்றுத்திட்டம் குறித்து பாசீலிக்கத் தயார் என்று கூறியுள்ளார். இந்த மாற்றுத்திட்டம் என்னவெனில், பிராந்திய ரீதியான சுயாட்சிக் கட்டமைப்பு என அவர் தனது உரையில் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். இதனால், இது குறித்து எந்தக் குழப்பமும் அடையத்தேவையில்லை. - இவ்வாறு கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று ஒஸ்லோவில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அளித்த விளக்கத்தின்போது குறிப்பிட்டார்.

நாம் ஏற்கனவே அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றோம். நானும் பேராசிரியர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
உயர்தர மாணவர்களுக்கான பகுதி இன்றைய மாணவர் அரங்கில்.

## முஸ்லிம் காங்கிரஸ் விவகாரத்தில் ஹக்கீம் தலையிட நீதிமன்று தடை!



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்துடனும், உயர்பீடத்துடனும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலையிடுவதைத் தடுக்கும் உத்தரவை கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் நேற்றுப் பிறப்பித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவர் எஸ்.சுபைதீன், தவிசாளர் ஏ.சி.எஸ்.எல்.எம். அதாவுல்லா, உயர்பீடத்தின் 11 அங்கத்தவர்கள் தாக்கல் செய்த மனுவொன்றை பரிசீலனை செய்த பின்னர், (10 ஆம் பக்கம் பார்க்க)

## மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா கடும்போக்காளர் என குற்றச்சாட்டு

(ஒஸ்லோ)

யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகக் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஒஸ்லோவில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் உருவான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக - குறிப்பாக, வட பகுதி இராணுவத்தினர் நடந்து கொள்ளவில்லை என அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்திருந்தார்.

யாழ்.குடாவிலிருந்து இடம்பெயர்ந்த 150,000 மக்கள் வன்னியிலிருந்து யாழப்பாணத்தில் மீளக் குடியமர வந்தபோதும், அவர்களுக்கு - உயர்பாதுகாப்பு வலயத்தினால் தமது சொந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர முடியாது மீளவும் வன்னிக்குத் திரும்பியுள்ளதாக நேற்று ஒஸ்லோவில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது பாலசிங்கம் தெரிவித்தார். (01)

SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
CMB 505632 - 390128 - 0777-517019
(சி-148)

# செயலகம் முன்பாக மறியல் நேற்றும் தொடர்ந்தது!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர், யாழ். அரச செயலகத்திற்கு முன்பாக நடாத்திவரும் மறியல் போராட்டம், இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்ததுடன், யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்திற்கு முன்பாகவும் இம் மறியல் போராட்டம் விஸ்தரிக்கப்பட்டது.

கடந்த காலங்களில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பின் காணாமற்போன, தமது உறவுகளின் உண்மை நிலையை அரசாங்கம் உடனடியாக வெளிப்படுத்த வேண்டுமெனக் கோரி, காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர், யாழ்.செயலகம் முன்பாக இரண்டாவது நாளாக நேற்றைய தினமும் தொடர்ந்து தமது போராட்டத்தினை நடத்தினர்.

அத்துடன் மேற்படி சங்கத்தின் இன்னொரு பகுதியினர், யாழ்.பிரதேச செயலகம் முன்பாகவும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலையில் இருந்து பிற்பகல்வரை தொடர்ந்த இம் மறியல் போராட்டத்தினால் யாழ். அரசாங்க செயலகமும் யாழ்.பிரதேச செயலகமும் முற்றாக செயலிழந்தன.





IEECD
121/1, அரசடி வீதி, கந்தர்மடம்
(Personal & Group Classes)
ஆங்கில மொழி
கல்வி ஆண்டு 2003
தரம் 6 தொடக்கம் O/L வரை
பொது ஆங்கிலம் A/L (2004/05)
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
ஒவ்வொரு வகுப்பிலும் 10 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்
ஆசிரியர்:-திரு.க.றமணதாசன்
(சி-258)


## யாழ்.மாநகர சபையின் அறிவித்தல்

1978 ஆம் ஆண்டின் 41ம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரமும், அதன் திருத்தங்கள் உட்படவும்:

யாழ்.மாநகரசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் புதிதாகக் கட்டுதல், கட்டடங்களில் மாற்றம் செய்தல் உட்பட அண்மைக்கால இராணுவ நடவடிக்கை காரணமாக அழிந்த, உடைந்த கட்டடங்கள், மலசலகூடங்கள் ஆகியவற்றைப் புனரமைத்தல் போன்ற சகல அபிவிருத்தி வேலைகளை நடைமுறைப்படுத்துவதும் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே, மாநகரசபையிடமிருந்து பெறப்படும் விண்ணபப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து, யாழ்.மாநகர சபையின் முன் அங்கீகாரம் பெற்ற பின்பே வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருவதுடன், முன் அங்கீகாரம் பெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாது அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

இந்த அறிவித்தல் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், பாடசாலைகள், கோவில்கள் யாவற்றுக்கும் பொருந்தும்.

செ.கந்தையன்,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

(சி-260)


நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல் வண்டமி நடித்த
BLACK EAGLE
11.00, 2.45, 6.00, 7.45
6ஆம் திகதி முதல்
நேருக்கு நேர்
(சி-187)

ராஜா
யாழ்ப்பாணம்.

நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)


## இன்றைய நாள் இனிய நாள்

**04-12-2002 - புதன்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 18ஆம் திகதி**

*திதி* :- அமாவாசை பி.ப 1.49 வரை அதன் மேல் பிரதமை.
*நட்சத்திரம்* :- அனுஷம் - முற்பகல் - 11.42 வரை அதன் மேல் கேட்டை.
*ராகுகாலம்* :- 12.15 - 1.45
*சுபநேரம்* :- 4.45 - 6.15

**மேடம்** :- உடனலக் குறைவு, இரத்த அழுத்த நோயினால்கவனம், தூரப்பிரயாணம் தவிர்க்கவும், புதிய காரியங்களில் ஈடுபடுவது தவிர்க்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**இடபம்** :- உடனலம், உளநலம் நன்று, பெண்கள் உளப்பூரிப்பு, உடல் குளிர்ந்த உணவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- கொடுத்த பணம் வரவு, நோய் நீக்கம், தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், கல்விச் சமநிலை, வியாபாரம் முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தெய்வ வழிபாடு, சமயநூல் பாராயாணம், பொது சேவையில் பங்கு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- கொடுக்கல் வாங்கல் பிணக்கு, மாதா சுகக்குறைவு, பெண்கள் சுகக்குறைவு, வைத்தியச் செலவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- நண்பர்கள் மகிழ்வு, உற்சாகம், எடுத்த காரியம் வெற்றி, விதம் விதமான உடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரச் சமநிலை.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- உடனலக்குறைவு, வரவுக்குமிஞ்சிய செலவு, தேவையற்ற பிரச்சினை, வாக்குவாதம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**விருச்சிகம்** :- பணவரவு, தெய்வவழிபாடு, சமயநூல் பாராயணம், நண்பர்கள், உறவினர் உறவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- வீண் அகங்காரம், இதனால் செலவு, வாக்குவாதம், கவலை, உடனலக்குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**மகரம்** :- மன மகிழ்ச்சி, விருந்தினர் வருகை, அறுசுவையுண்டி, பெண்கள் மகிழ்ச்சி, கலை நிகழ்ச்சியில் மகிழ்வு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கும்பம்** :- தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், சமூக சேவையில் பங்கு, புகழ், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- பிதா தேகசுகக் குறைவு, எதிரியால் கவலை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.


# STUDY IN INDIA

## Admission Notice - Year 2003

### Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

### MUTHAYAMMAL College of Arts& Science affiliated to PERIYAR UNIVERSITY (Salem)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. Biocemistry | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc. Biotechnology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Physics | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Sc.Microbiology | 3 Year | Pass in All Subjects with Bio combination |
| B.Com. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Cs | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.B.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.C.A. | 3 Year | Pass in All Subjects in any discipline |

### SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY (Channai)

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

### நீங்கள் O/L முடித்துவிட்டீர்களா???

இந்தியாவில் Diploma (3வருடம்) பயிற்சி நெறியில் சேர்ந்து, பின் ANNA UNIVERSITY (மேலும் 2 வருடம்) பயின்று பட்டதாரியாக (Graduate/ Degree Holder) வாய்ப்பு.

**3 Years Diploma in**

- CIVIL ENGINEERING
- MECHANICAL ENGINEERING
- ELECTRICAL & ELECTRONICS
- COMPUTER TECHNOLOGY
- ELECTRONICS & COMMUNICATION
- AUTOMOBILE
- INFORMATION TECHNOLOGY
- ELECTRONICS & INSTRUMENTATION

**MUTHAYAMMAL POLYTECHNIC**
Rasipuram - 637 408, Namakkal Dt, T.N, India

◈ Separate Hostel for Boys & Girls and with all Meals ◈ All necessary VISA formalities will be handled by the College

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, 'Colombo Plaza', 50 Galle Road, Colombo-06.
Tel: 072-984297
074-512468

# பாலா - பீரிஸ் தனியாகச் சந்திப்பு; இரண்டு மணிநேரம் நீடித்தது பேச்சு!



(ஒஸ்லோ)

ஒஸ்லோவில் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக சமதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாக, புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அமைச்சர் ஜி. எல்.பீரிஸும் தனிப்பட்ட ரீதியில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர்.

பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னர், இடம் பெற்ற இச்சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது. உத்தியோகபற்றற்ற ரீதியில் நடத்தப்பட்ட இப்பேச்சுக்களின்போது - பிரதானமான அரசியல் விடயங்கள், பிரச்சினைகளை எவ்வாறு பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவது என்பது குறித்தும் அதற்கான வழிவகைகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.



அத்துடன் பேச்சுகளின் முடிவில் இரு தரப்பும் அறிக்கைகளைப் பரிமாறிக்கொள்வதென்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது. வட-கிழக்கு பகுதிகளில் உள்ள பெளத்த ஆலயங்களை மீளமைப்பது குறித்து அமைச்சர் பீரிஸ் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடியுள்ளார்.

ஒஸ்லோ நேரப்படி காலை 11 மணிக்கு ஆரம்பமான இப்பேச்சுகள் சுமார் இரண்டு மணிநேரம் நீடித்ததாகவும், இந்தப் பேச்சுகள் தொடர்பாக அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பீரிஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

## மணிக்கூட்டு வீதியூடாக பஸ் போக்குவரத்து

(மீசாலை)

யாழ்ப்பாணம் - முகமாலை பகுதிகளுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் 769 இலக்க பஸ்கள் மணிக்கூட்டுக் கோபுர வீதியாலேயே கடந்த 30ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த பல வருடங்களாக இவ் வீதியூடான போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (25)

## ஓட்டோ அன்பளிப்பு

(ஊரெழு)

யாழ்.குடாநாட்டில் உள்ள பிரதான ஆலயங்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் ஓட்டோ அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் கடந்த வாரம் சிறுப்பிட்டி ஞானவைரவர் ஆலயத்திற்கும் அமைச்சினால் ஓட்டோ ஒன்று வழங்கப்பட்டது.(96)

## ஓட்டமாவடியில் துப்பாக்கிச் சூடு முஸ்லிம் இளைஞர் மரணம்!

### இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றியவர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் ஓட்டமாவடிப் பகுதியில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வாழைச்சேனை, ஓட்டமாவடிப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. சைக்கிளில் வீடுநோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே 27 வயதான சீனி முகமத் அப்துல் அஸீஸ் என்ற இந்த இளைஞர் படுகாயமடைந்தார்.

உடனடியாக இவர் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும், அங்கு அவர் உயிரிழந்தார். இச் சம்பவத்தில் இவருடன் சென்ற மீராசாஹிப் புகாரி என்ற இளைஞர் காயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் முன்னர் இராணுவப் புலனாய்வுத் துறையினருடன் இணைந்து பணியாற்றியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவரது கொலை தொடர்பாக வாழைச்சேனை நீதிவான் அப்துல் கபூர் விசாரணைகளை நடத்திய பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## மட்டக்களப்பு நிலைமை குறித்து ஜெனரல் றோஸ் நேரில் ஆராய்வு!

### படைத்தரப்பு - புலிகளுடனும் பேச்சு

(நமது நிருபர்)

பிரித்தானியாவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஜெனரல் மைக்கல் றோஸ் இரண்டாவது தடவையாக நேற்றுமுன்தினம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் மட்டக்களப்பு நகரில் உள்ள 23 ஆவது படையணித் தலைமையகத்தில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசனையில் ஈடுபட்டதுடன், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சகிதம் கொக்கட்டிச்சோலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ப் பலரையும் சந்தித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் கடந்த மாத இறுதியில் மட்டக்களப்புக்கு விஜயம் செய்த இவர், புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் நிலவும் சூழ்நிலை குறித்தும் ஆராந்துள்ளார்.



தற்போது பாதுகாப்பு தரப்பினரின் முகாம்கள் அகற்றுவது தொடர்பாக சாதக, பாதக நிலைபற்றிய தகவல்களை இவர் பெற்றுக் கொணடதாகவும் அறியவருகின்றது. கொழும்பில் இருந்து விசேட ஹெலிகொப்டர் மூலம் சென்றடைந்த மைக்கல் றோஸ் பின்னர் கொழும்பு திரும்பினார்.

இவர், கடந்தவாரம் யாழ்பபாணத்துக்கும் வந்து, இங்குள்ள இராணுவ நிலைமைகள் குறித்தும் இயல்பு நிலை உருவாக்கம் குறித்தும் ஆராய்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வூதிய நிலுவைகள் பிரதேச செயலகங்களுக்கு! -ஜனவரியில் பெறலாம்-

(கொழும்பு)

கடந்த காலங்களில் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படாதிருந்த ஓய்வூதிய நிலுவைகளை வழங்குவதற்கென சுமார் 150 கோடி ரூபாவுக்கும் அதிகமான நிதியை ஓய்வூதியத் திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த நிதியில் இருந்து ஓய்வூதியர்களுக்கான நிலுவைக் கொடுப்பனவுகள் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த பல மாதங்களாக ஓய்வூதியர்களுக்கான நிலுவைப் பணம் வழங்கப்படாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இதுவரை தமிழீழ நீதிமன்றங்களில் 23 ஆயிரம் வழக்குகள் விசாரணை

### திருமலை அரசியல் பொறுப்பாளர் திலக்

(திருகோணமலை)

தமிழீழ நீதிமன்றங்களில் இதுவரையில் 23 ஆயிரம் வழக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் திருகோணமலை கட்டைபறிச்சானில் தமிழீழ நீதிமன்றத் திறப்பு விழாவில் உரையாற்றிய மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தனது உரையில, தமிழீழ நீதிமன்றம் முதல் முறையாக திருகோணமலை மாவட்டத்தில் செயற்படவுள்ளது. இங்கு தமிழ் மொழியிலேயே விசாரணைகள் நடைபெறும். இங்கு நீதி செலுத்துபவர்கள் போராளிகளே. இவர்கள் போராட்ட காலத்தில் நீதித்துறை சார்ந்த சகல பயிற்சிகளையும் பெற்றுள்ளனர்.

ஏறத்தாழ ஏழு வருடங்களாக இவர்கள் நீதித்துறையில் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களால் விசாரிக்கப்பட்ட வழக்குகளில் 5 வதத்துக்கும் குறைவான வழக்குகளே மேன்முறையீட்டுக்குச் சென்றிருக்கின்றன. இவற்றைப் பார்க்கும் போது எமது நீதியின்பால் மக்கள் கொண்டுள்ள விசுவாசத்தை உணர்ந்த கொள்ள முடிகின்றது எனத் தனது உரையில் திலக் மேலும் குறிப்பிட்டிருந்தார்.



### உள்வரும் அழைப்புகளுக்கு கட்டணம் இல்லை

கையடக்கத் தொலைபேசிகளுக்கு உள்வரும் அழைப்புக்களுக்கு அறவிடப்படும் கட்டணங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் நீக்கப்படும் என்று ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

தமது அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

### றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.03 |
| சுபஹ் | 5.18 |
| உதயம் | 6.39 |
| லுஹர் | 12.32 |
| அஸர் | 3.54 |
| ம.்.ரிப் | 6.24 |
| இஷா | 7.38 |

## மட்டக்களப்பில் வீதித்தடைகளை அகற்றிவரும் படையினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகர அரசடிச் சந்தியில் சுற்றுவட்டத்தின் வீதித் தடைகள் முற்றாக நீக்கப்பட்டுள்ளன. முன்பு வீதியின் அரைப்பங்கு முற்கம்பியால் தடைப்பட்டிருந்தது. இதனால் மக்கள் பாரிய சிரமத்தினை எதிர்கொண்டிருந்தனர்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பாதுகாப்பு உபகுழுக்கூட்டம் வவுனியாவில் இடம் பெற்றபோது விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஏற்பவே, வீதித்தடைகள் நீககப்பட்டுள்ளன. இதேபோல் கொமமாந்துறை மற்றும் மயிலம்பாவெளி ஆகிய இடங்களிலும் வீதித்தடைகளை அகற்றவும் இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (06)

## தென்னாபிரிக்க நீதிபதி யாழ். வருகின்றார்!

(யாழ்ப்பாணம்)

தென்னாபிரிக்க நாட்டின் நீதிபதி ஒருவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் மனித உரிமைகள் பேணப்படுவது குறித்தும், இலங்கையில மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் சட்ட ஏற்பாடுகள் குறித்தும் தகவல்களைச் சேகரித்துக் கொள்வதற்கே தென்னாபிரிக்க நீதிபதி இங்கு வருகை தரவுள்ளார் என்று தெரியவருகிறது.

அத்துடன் பல அரசியல் தலைவர்களுடனும் இவர் பேச்சுகள் நடாத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (க,லி)

## மனித உரிமை ஆணைக்குழுவை குடாநாட்டில் வழிநடத்துவதற்கு ஐவர் கொண்ட ஆர்வலர் குழு!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் நிலமையை மேலும் வலுப்படுத்துவதற்காக ஐந்து பேர் கொண்ட மனித உரிமைகள் ஆர்வலர்கள் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

மதத்தலைவர்கள், கல்விமான்கள, சட்டவல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டதாக இக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.

கல்வியியற்துறைப் பேராசிரியர் ஆறுமுகம், சிரேஷ்ட சட்டத் தரணி சாந்தா அபிமன்னசிங்கம், தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி ஜெபநேசன், மௌலவி சுபியன் புகாரி ஆகியோரே இக்குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் வரையறுக்கப்பட்ட அளவில் செயற்பட்டு வந்த மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.கிளையை வலுப்படுத்தவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆணைக் குழுவின் யாழ்.கிளையின் ஆட்பலம், பொருட்பலம் என்பவற்றை அதிகரிப்பதிலும், செயற்பாடுகளை வழிநடத்துவதில் இந்த ஆர்வலர்குழு ஈடுபடும்.

அத்துடன் இந்த மனித உரிமைகள் ஆர்வலர் குழுவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த காலங்களில் குடாநாட்டில் இருந்து காணாமற் போனோர் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்டுள்ள 232 புகார்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள - முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையில், திருமலை, மன்னார் மாவடங்களின் முன்னர் அரச அதிபராகப் பணியாற்றிய கமிலஸ் பெர்ணான்டோ, கல்வியியலாளர் ஜெசீமா இஸ்மாயில் ஆகியோரைக் கொண்ட விசாரணைக்குழு நியமிக் கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தககது.

அண்மையில் மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த போதே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# பிரதமரிடம் உள்ள அதிகாரங்களை அவசியமேற்படின் மீளப்பெறுவேன்!

## குருநாகல் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

பிரதமர் மற்றும் அமைச்சர்களின் வசமுள்ள அதிகாரங்களை அவசியம் ஏற்படுகின்றபோது- அவர்களிடமிருந்து தன்னால் மீள எடுத்துக் கொள்ளமுடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியாகப் பதவியேற்று எட்டு வருடங்கள் பூர்த்தியானதை யொட்டி அண்மையில் குருநாகலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா உரையாற்றுகையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

நாடாளுமன்றத்தை இப்போதைக்குக் கலைக்கும் எண்ணம் கிடையாது. இப்போது தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு ஏற்ற நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் இல்லை. இவர்கள் தேர்தலுக்குத் தயாராக வில்லை. எனவே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துகின்ற வாய்ப்புக்கள் இப்போது இல்லை. ஆனாலும் அவசியமேற்படுகின்ற சூழ்நிலையில் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் வசமுள்ள அதிகாரங்களை என்னால் மீளப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

## மீசாலையில் சைக்கிள் திருட்டு

(மீசாலை)

மீசாலைச் சந்திக்கு அருகிலுள்ள அல்லாரை வீதியில் உள்ள வீட்டிலிருந்த சைக்கிள் நேற்று முன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது.

வீட்டின் பின்பக்கத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டு க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் படித்துக் கொண்டிருந்தபோதே சைக்கிள் களவாடப்பட்டுள்ளது. (25)

# வெண்புறா நிறுவனத்தின் கிளை யாழ்ப்பாணத்தில் நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில்நுட்ப நிறுவனம் தனது கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கவுள்ளது.

யாழ்ப்பாணம், சோமசுந்தரம் வீதியில்- நாளை காலை 10.30 மணியளவில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தத் திறப்பு விழா நிகழ்வில், பயனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் கிளிநொச்சியில் பிராந்தியச் செயலகம் ஒன்றைக் கொண்டிருப்பதும், வன்னிப் பகுதியில் உடல் உறுப்புக்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுபபுக்களைத் தயாரித்துப் பொருத்துவதில் இந்நிறுவனம் ஈடுபட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## நகர அபிவிருத்தி சட்ட விதிகள் கலந்துரையாடல்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட விதிகள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாநகர சபையில் பதிவு செயயப்பட்ட படவரைஞர்களும், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப்பணிப்பாளர் என்.இராசநாயகம் ஆகியோரும் பங்குபற்றும் இக்கலந்துரையாடலில்- மாநகரசபையில் பதிவு செய்யப்பட்ட படவரைஞர்கள் மட்டுமன்றி ஆர்வமுள்ள ஏனைய படவரைஞர்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் பங்குபற்றிப் பயன் பெறலாம் என மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# மீசாலைக்கு மின்சார வசதி பரீட்சார்த்தப் பணி ஆரம்பம்!

மீசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான முதற்கட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் மின்சார சபையினால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

மீசாலை புத்தூர்ச் சந்தியில் பொருத்தப்பட்டுள்ள பாரிய மின் பிறப்பாக்கி மூலமே மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்றுச் சில வீடுகளுக்கு குறுகிய நேர மின் வழங்கல் மேற்கொள்ளப் பட்டது. இன்னும் சில தினங்களில் இப்பணிகள் பூர்த்தியானதும் மின் வநியோகம் சீராக நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (29)

# சரசாலை, மட்டுவில் விவசாயிகளுக்கு உர வகைகள் அன்பளிப்பு!

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சரசாலை, மட்டுவில், கல்வயல் ஆகிய பகுதிகளில் நெற்செய்கை மேற்கொள்வோருக்கு ஜேர்மன் மனிதாபிமான உதவிகள் திட்டத்தின் கீழ் உரவகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சின் உதவியுடன் ஜேர்மன் விவசாயப் பிரிவினர் இவற்றினை வழங்கி வருகின்றனர். இப்பகுதி விவசாயிகளுக்கு ஏற்கனவே விதை நெல்லும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனினும், சரசாலை வடக்கில் உள்ள விவசாயிகளுக்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை என இப்பகுதி விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (34)

# வடக்கில் சகல வசதிகளுடனும் வைத்தியசாலை அமைக்கத் திட்டம்

## சர்வதேச நிறுவனங்கள் உதவும்

சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடன் வடக்கில் சகல வசதிகளுடன் வைத்தியசாலை ஒன்றை அமைக்கத் தொண்டர் நிறுவனங்கள் முன்வந்துள்ளதாக - ஊரெழு புற்றுநோயாளர்களுக்கு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனப்பொறுப்பாளர் தெரிவித்தார்.

தற்போது வடபகுதியில் உள்ள பல்வேறு நோயாளர்கள் கொழும்பு அல்லது தென்னிந்தியாவிற்குச் சென்று மருத்துவ சிகிச்சை பெறுகின்றனர்- இதற்குப் போதுமான நிதி அவர்களிடம் இன்மையால் பெரும் சிரமங்களை நோயாளர் எதிர்நோக்குகின்றனர். எனவே வட பகுதியில் இவ்வைத்தியசாலை அமையுமாயின் அது மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்றும் தெரிவித்தார். (96)

## திருத்தம்

நேற்று மூன்றாம் பக்கத்தில் இடம்பெற்ற புத்தக வெளியீடு தொடர்பான படத்தின் குறிப்பில், எழுத்தாளர் சிற்பி என்பதற்குப் பதிலாக பேராசிரியர் நந்தி எனத் தவறுதலாகக் குறிபபிடப்பட்டுள்ளதென்பதை வாசர்களுக்கு அறியத் தருகின்றோம்.

## அதிபர்களுக்கான செயலமர்வு வரணியில்

(மீசாலை)

அதிபர்களுக்கான மதிப்பீடு செயலாற்றுகைத் தரங்கணிப்புச் செயலமர்வு எதிர்வரும் 16,17 ஆகிய திகதிகளில் காலை 9 மணிக்கு வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் தவறாது பங்குபற்றுவதுடன் ஆசிரியர்கட்கான செயலமர்வில் சிரேஷ்ட ஆசிரியர்கள் இருவரையும் பங்குபற்ற அறிவுறுத்துமாறும் - அதிபர்கள பாடசாலை விடுமுறை ஆரம்பிக்க முன்னர் தங்களுக்கான செயலமர்வில் வருடாந்த ஆசிரியர்களின் பூரணப்படுத்தப்பட்ட செயலாற்றுகை தரங்கணிப்பு படிவங்களைக் கொண்டு வருமாறும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் செல்வராசா அறிவித்துள்ளார். (25)

## திருவாசகவிழா பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, திருவாசக விழாவை ஒட்டிய பண்ணிசைப் போட்டியை பாடசாலை மாணவர் களிடையே நடாத்தவுள்ளது.

போட்டிகளில பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபர்கள் அல்லது பெற்றோர் மூலம் உறுதிப் படுத்தப்பட்ட சுயவிபரங்களை , இம் மாதம் 12 ஆம் திகதிககு முன்னராக அனுப்பிவைக்கும்படியும், போட்டிகள் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படும் எனவும்- ஆச்சிரமப் பேரவையினர் அறிவித்துள்ளனர்.

## கலைவிழா

யாழ்.மாநகரசபை பாலர் பாடசாலையின் 10ஆவது ஆண்டு நிறைவுக் கலைவிழா இன்று பி.ப 3 மணிக்கு நாவலர் கலாசார மணடபத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர ஆணையாளர் தலையில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் கலந்து கொள்ளவுள்ளார்.

# மனித உரிமை தினத்தன்று எதிர்ப்பு நடவடிக்கைக்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் பத்தாம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கும் மனித உரிமைகள் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த எதிர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. இவ்வாண்டுக்கான மனித உரிமைகள் தினத்தன்று மேற்கொள்ளப்படவிருக்கும் எதிர்ப்புப் போராட்டம் அநேகமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்பாக நடாத்தப்படவுள்ளது. (க,லி)

# தெல்லிப்பளையில் இம்மாதம் முதல் புற்று நோயாளர்களுக்குச் சிகிச்சை!

கடந்த 12 வருடங்களுக்குப் பின்பு மீண்டும் பழைய இடத்தில் இயங்கவுள்ள தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருமாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்.

இம்மாத நடுப்பகுதியில் முதற்கட்டமாக புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி-நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் சென்று வர போக்குவரத்து வசதிகளையும், குடிநீர் வசதியையும் ஏற்படுத்தித் தருமாறு வலி.வடக்கு பிரதேசசபைத் தலைவரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார். (08)

# வலி.வடக்குப் பகுதி பிரதேசசபை காங்கேசனில் இயங்கவேண்டும்

## அனுமதிக்குமாறு கோரி தீர்மானம்!

வலி. வடக்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தை மீண்டும் காங்கேசன்துறையில் இயங்க அனுமதிக்குமாறு அமைச்சர்களையும், படை அதிகாரிகளையும் கோருவதென பிரதேச சபையால் ஏகமனதாக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களாக இடம் பெயர்ந்து மல்லாகம் உப அலுவலகத்தில் பல வசதியீனங்களுக்கு மத்தியில் பிரதேசசபை இயங்கி வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது. (08)

## இன்றுமுதல் 3 மாதங்களுக்கு அன்னதானம்

தும்பளை இலட்சுமணன் தோட்டப்பிள்ளையார் கோவிலில் மூன்று மாதங்களுக்கு - தொடர்ச்சியாக அன்ன தானம் வழங்கப்படவுள்ளது.

இன்று முதல் நாளொன்றுக்கு 350 பேருக்கு அன்னதானம் வழங்கப்படும். இதற்காக 3 இலட்சம் ரூபா நிதியை இந்து கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆலயத் தொண்டர்களுக்கு வழங்கியுள்ளார். (ச)

## நீதிமன்றில் கண்டெடுக்கப்பட்ட பணம்

யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் ஒரு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் காலை யாழ். நீதிமன்ற வளாகத்திலிருந்து ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு நீதிமன்ற அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணத்திற்கு உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

ஏழாவது அகவையில்.



பெயர் :யோ.சுமிர்தா
முகவரி:அம்பாள் குளம், கிளிநொச்சி.

எட்டாவது அகவையில்.



பெயர் :ச.பிரியந்தி
முகவரி: பொன்னாலை, சுழிபுரம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------------------
பெற்றார் ஒப்பம்

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை (மாதிரி வினாத்தாள்)

# பொருளியல் I



இரண்டு மணித்தியாலங்கள்



# மாணவர் மலர்

**இப்பகுதியிலுள்ள "அ" பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் "ஆ" பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிந்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

## பகுதி "அ"

*(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களை தெரிவு செய்க)*

**வினா:**

1. அ) "1995-2000 காலப்பகுதியில் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவு 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளது" இதனைக் காட்டுவதற்கு உற்பத்தி இயல்தகவு வளையி எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைக் காட்டுக.

**விடை:**




- உற்பத்தி இயல்தகவு வளையி வலதுபக்கம் நகரும்.
- உற்பத்தி இயல்தகவு வளையியின் எல்லா புள்ளிகளில் இருந்தும் உற்பத்தி இயல் அளவு 50 சதவீதத்தால் அதிகரிக்கும்.
- உற்பத்தி இயல்தகவு வளையி எல்லா புள்ளிகளில் இருந்தும் 50 சதவீதத்தால் வலது பக்கம் நகரும்.
- வரைபடத்தின்படி X பொருளின் உற்பத்தி இயல் அளவு கிடையச்சில் 800 அலகுகளிலிருந்து 1200 அலகுகளாக 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.
- X பொருளின் உற்பத்தி இயலளவு கிடையச்சில் 600 அலகுகளில் இருந்து 900 அலகுளாக 50 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**வினா:**

ஆ) "குறிப்பிட்டதோர் உற்பத்தி நடத்தையில் அமையச் செலவு நிலையாகக் காணப்படுகின்றது" இந்நிலைமையை ஒரு உற்பத்தி இயல்தகவு வளையியில் எவ்வாறு காட்டுவீர்?

**விடை:**




- மாறா அமையச் செலவைக் காட்டும் உற்பத்தி இயல்தகவு வளையி நேர்கோட்டு வடிவில் அமைந்திருக்கும்.
- இவ்உற்பத்தி இயல்தகவு வளையில் மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும்போது கிடையச்சில் காட்டப்படும் பொருளில் பெறப்படும் ஒவ்வொரு அலகிற்காகவும் நிலைக்குத்தச்சில் காட்டப்படும் பொருளில் இழக்கப்படும் தொகை எல்லா விடயத்திலும் ஒரே அளவாக இருக்கும்.
- வரைபடத்தின்படி ஒரு அலகு X இற்கான அமையச் செலவைக் காட்டும் $\Delta Y/\Delta X$ என்ற விகிதம் உற்பத்தி இயல்தகவு வளையியின் சரிவைக் காட்டும். நேர்கோட்டு உற்பத்தி இயல்தகவு வளையியில் அதன் சரிவு நிலையானது. ஆகையால் அமையச்செலவு நிலையானது.

**வினா:**

இ) "சந்தைப் பொருளாதாரம் ஒன்று கட்புலனுக்கு எட்டாத ஒரு கரத்தினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றது" இக்கூற்றினை விளக்குக.

**விடை:**

- சந்தைப்பொருளாதாரம் ஒன்று விலைப்பொறிமுறையினால் இயக்கப்படுகின்றது. இவ்விலைப்பொறிமுறையே கட்புலனுக்கு எட்டாத கரம் எனப்படுகின்றது.
- கேள்வி, நிரம்பல்களினால் நிர்ணயிக்கப்படுகின்ற விலைகளின் அடிப்படையில் உற்பத்தி, பங்கீடு தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன.
- இவ்விலைப்பொறிமுறையின் செயற்பாடே கட்புலனுக்கு எட்டாத கரம் எனப்படும்.
- என்ன பொருளை, எந்தளவு, எப்படி, யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், சந்தைக் கேள்வி நிரம்பல்களினால் இயங்கும் விலைப்பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

**வினா:**

2. அ) கேள்வி விதிக்கு மாறான விதத்தில் பண்டமொன்றிற்கான கேள்வி செயற்படும் சந்தர்ப்பங்கள் யாவை?

**விடை:**

- ஒரு பொருளின் விலை அதிகரிக்க அதனது கேள்வித்தொகையும் அதிகரிக்கும், விலைகுறைய கேள்வித்தொகையும் குறையும்.
- கௌரவ மதிப்புடைய பொருட்கள் மற்றும் சமூக அந்தஸ்துடைய பொருட்கள்.
- ஒரு பொருளின் தரம் அதன் விலையினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படும் பொருட்கள்.
- இழிவுப்பொருட்களின் ஒரு வகையான கிபன் பொருட்கள் இவற்றின் விலை மாற்றமடையும்போது ஏற்படுகின்ற பெரிய எதிர்க்கணிய வருமான விளைவினால் புறநடைக்கேள்வி தோன்றுகின்றது.

**வினா:**

ஆ) பண்டமொன்றின் கேள்வியின் விலை நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

**விடை:**

- பொருளின் தன்மை - அத்தியாவசியப் பொருள், ஆடம்பரப் பொருள்
- பொருளின் பாவனைக்காலம் - நீண்டகாலப் பாவனை, குறுங்காலப் பாவனை
- பொருளின் பயன்பாடு - பல பயன்பாடுகள், குறுங்காலப் பயன்பாடுகள்
- பொருளை வரையறுக்கும் முறை - பரந்த முறையில் வரையறுத்தல், குறுங்கால முறையில் வரையறுத்தல்.
- குறிப்பிட்ட பொருளின் மீதான செலவு நுகர்வோரின் வருமானத்தில் வகிக்கும் பங்கு கருதப்படும் காலப்பகுதி - குறுங்காலம், நீண்டகாலம்.

**வினா:**

இ) குறிப்பிட்ட பண்டமொன்றின் விலை 4 ரூபாவிலிருந்து 6 ரூபாவாக அதிகரிக்கும் போது, அப்பண்டத்தின் கேள்வித் தொகை 1000 அலகுகளிலிருந்து 500 அலகுகளாகக் குறைகின்றது. இப்பண்டத்திற்கான கேள்வி அலகு நெகிழ்ச்சியுடையது என்ற முடிவிற்கு வருவீரா? உமது விடையை விளக்குக.

**விடை:**

- இல்லை. இங்கு விலை 50 சதவீதத்தால் அதிகரிக்கும் போது கேள்வித் தொகையும் 50 சதவீதத்தால் குறைகின்றது. எனவே புள்ளி நெகிழ்ச்சிக் கணிப்பீட்டின்படி ஒருமை நெகிழச்சி எனலாம்.
- விலை 4 ரூபாவிலிருந்து 6 ரூபாவாக அதிகரிக்கும்போது மொத்த நுகர்வோர் செலவு 4000 ரூபாவிலிருந்து 3000 ரூபாவாகக் குறைகின்றது.
- விலை அதிகரிக்கும்போது மொத்த நுகர்வோர் செலவு குறைகின்றது எனில், கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகும். இங்கு விலைமாற்றம் பெரிதாக இருப்பதனால் புள்ளி நெகிழ்ச்சி முறை பொருந்தாது. வில் நெகிழ்ச்சி முறையே பொருந்தும்.

**500 / 2 X 10 / 1500 = 1.67**

**வினா:**

3. அ) தனியார் செலவுகள், சமூகச் செலவுகள் என்பவற்றை வேறுபடுத்துக?

**விடை:**

***தனியார் செலவு :~***

குறிப்பிட்டதோர் உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையின்போது அவ் உற்பத்தியாளரால் அல்லது நுகர்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற செலவே தனியார் செலவாகும்.

இது அவரது கணக்கு புத்தகத்தில் பதியப்பட்ட செலவாகும்.

***சமூகச்செலவு:~***

குறிப்பிட்டதோர் உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையின்போது ஏற்படும் தனியார் செலவுடன் சமூகத்திற்கு ஏற்படும் இழப்புக்களையும் உள்ளடக்கியதே சமூகச் செலவாகும்.

குறிப்பிட்ட உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கையின்போது ஏற்படும் எதிர்கணிய வெளிவாரி விளைவுகளினால் இது தோன்றுகின்றது.

இச்செலவுகள் கணக்குப் புத்தகத்தில் பதியப்படமாட்டா.

**வினா:**

ஆ) சந்தைத் தோல்வி ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

**விடை:**

- வெளிவாரி விளைவுகள் உள்ள நிலையில் சந்தைத் தோல்வி ஏற்படும். கேள்வி, நிரம்பல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் தனியார் செலவுகளையும் தனியார் நன்மைகளையும் அடிப்படையாகக் கொண்டவையாகும். இவை சமூகச் செலவுகளையும் சமூக நன்மைகளையும் வெளிப்படுத்துவதில்லை. இதனால் சந்தைத் தீர்மானங்கள் உற்பத்தி நுகர்வு என்பவற்றை உத்தமமான அளவுக்கு இட்டுச் செல்லமாட்டா.
- போட்டிச் சந்தை மறைந்து தனியுரிமை தோன்றும்போது சந்தைத் தோல்வி ஏற்படும். இந்நிலையில் நுகர்வோர் மீது உற்பத்தியாளர் அதிகாரம் செலுத்துவதுடன் போட்டிச் சந்தையிலும் பார்க்க உற்பத்தி குறைவாக இருக்கும்.
- சந்தை முறையின் கீழ் வருமானப் பங்கீடு சமத்துவமானதாக இருக்கமாட்டாது. எனவே, வருமானப் பங்கீட்டில் பெருமளவு சமமின்மை காணப்படுவதுடன் சிலரின் கைகளில் செல்வம் குவியும்.

**வினா:**

இ) சந்தை தோல்வியடைவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் யாவை?

**விடை:**

- எதிர்க்கணிய வெளிவாரிகளைத் தரக்கூடிய நடவடிக்கைகளுக்கு வரி விதித்தல்.
- நேர்க்கணிய வெளிவாரிகளைத் தரக்கூடிய நடவடிக்கைகளுக்கு மானியம் வழங்கல்.
- தனியுரிமையைக் கட்டுப்படுத்துதல்.
- வருமானப் பங்கீட்டில் நிலவும் சமமின்மையை குறைக்கத்தக்க வகையில் வருமான மறுபங்கீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
  உ-ம் விருத்தி முறை வரிவிதித்தல்.
- வறியவர்களுக்கு உதவிப்பணம் வழங்குதல்.

**வினா:**

4. (அ) விவசாயப் பொருட்களின் விலைகளும் விவசாயிகளின் வருமானங்களும் அடிக்கடி தளம்பலுக்கு உட்படுவதேன்?

**விடை:** விவசாயப் பொருட்கள் பருவகாலச் செய்கைகளுக்கு உட்பட்டவை. இதனால் இவை தொடர்ச்சியாக நிரம்பல் செய்யப்பட முடியாதவை. விவசாயப் பொருட்கள் காலநிலைச் செல்வாக்கிற்குட்பட்டவை, காலநிலையின் சாதக பாதக மாற்றங்களுக்கேற்ப இவற்றின் நிரம்பல் தளம்பலடையும்.




விவசாயப் பொருட்கள் விரைவில் பழுதடையக் கூடியவை. இதனால் இவை இருப்பில் வைத்திருந்து தொடர்ச்சியாக நிரம்பல் செய்யப்பட முடியாதவை.

விவசாயப் பொருட்களின் விலைக்கும் அவற்றின் நிரம்பலுக்குமிடையில் ஒரு கால இடைவெளி காணப்படும். குறிப்பிட்ட ஒரு பருவகாலத்தில் நிலவும் விலைகேற்ப அடுத்த பருவகாலத்திலேயே நிரம்பல் செய்யப்படும்.

விவசாயப் பொருட்களின் கேள்வி, நிரம்பல்கள் சார்பளவில் நெகிழ்ச்சியற்றவை.

விவசாயப் பொருள் ஒன்றின் நிரம்பல் அதிகரிக்கும் போது கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருப்பதனால் விலை பெருமளவால் குறைவடையும். இதனால் விவசாயிகள் வருமானம் குறையும்.

விவச்ாயப்பொருள் ஒன்றின் நிரம்பல் குறையும் போது கேள்வி நெகிழ்ச்சியற்றதாக இருப்பதனால் விலை பெருமளவால் அதிகரிக்கும். விற்பனைத் தொகை சிறிதளவால் மட்டுமே குறைவடையும். விவசாயிகள் வருமானம் அதிகரிக்கும்.

**வினா:**

ஆ) ஒரு நிறுவனத்தின் குறுங்காலச் செலவுகளுக்கும் நீண்டகாலச் செலவுகளுக்கு மிடையிலான வேறுபாட்டைக் காட்டுக?

**விடை:**

- குறுங்காலத்தில் நிலையான காரணி, மாறும் காரணி என இரண்டு வகையான காரணிகள் காணப்படும்.
- குறுங்காலத்தில் நிலையான செலவுகள், மாறும் செலவுகள் என இரண்டு வகையான செலவுகள் காணப்படும்.
- நீண்ட காலத்தில் நிலையான காரணிகள் என எதுவும் இருக்கமாட்டாது. எல்லாம் மாறும் காரணிகளாகவே இருக்கும்.
- நீண்டகாலத்தில் நிலையான செலவுகள் என எதுவும் இருக்கமாட்டாது எல்லாம் மாறும் செலவுகளாகவே இருக்கும்.
- குறுங்காலச் செலவுகள் குறைந்து செல்விளைவு விதியினால் நிர்ணயிக்கப்படுகின்றது.
- நீண்டகாலச் செலவு அளவுத்திட்ட விளைவு விதியினால் நிர்ணயிக்கப்படுகின்றது.

பொருளியல் ஆசிரியர்: S.வரதராஜன்
B.A. (Hons)

(தொடரும்)

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரம்

# இரசாயனவியல்



## இரசாயனச் சமன்பாடுகளை ஈடுசெய்தல்

இரசாயனத் தாக்கங்களைக் குறிக்க சமன்பாடுகள் பயன்படுகின்றன. இச்சமன்பாடுகளை விஞ்ஞானத்துக் குரிய மொழி என்றே கூறலாம். இரசாயனச் சமன் பாடுகளை ஈடுசெய்வதில் மாணவர்கள் குழப்பங்களை அடைகின்றனர். பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். சமன்பாடுகளை மனனம் செய்ய முடியாது. இவற்றுக்கான தீர்வாக மாணவர்கள் இரசாயனச் சமன்பாடுகளை ஈடுசெய்யும் முறைகளை அறிவது அவசியமாகும்.

இரசாயனச் சமன்பாடுகளை ஈடுசெய்ய இருமுறைகள் கையாளப்படுகின்றன.

1. அயன்-இலத்திரன் அரைத்தாக்கமுறை.
2. ஒட்சியேற்ற எண் மாற்ற முறை.

### தாக்கங்களில் ஒட்சியேற்றல் தாழ்த்தலை இலகுவாக விளங்கிக் கொள்வது எவ்வாறு?

சேர்வைகளிலுள்ள மூலகங்களின் ஒட்சியேற்ற எண்களைக் கற்பதன் மூலம், இராசயனத் தாக்ககங்களில் ஒட்சியேற்றல், தாழ்த்தலை இலகுவாக விளங்கிக் கொள்வதன் மூலம், ஒட்சியேற்றுங்கருவிகள், தாழ்த்துங்கருவிகளை இனங்காண முடியும்.

இரசாயனத் தாக்கமொன்றில் மூலகம் அல்லது சேர்வை ஒன்றிலுள்ள மூலகமொன்றின் ஒட்சியேற்ற எண் அதிகரிக்குமாயின், அது ஒட்சியேற்றப் படுதல் என்றும், அம்மூலகம் அல்லது சேர்வை ஒட்சியேற்றுங் கருவி எனவும் அழைக்கப்படும்.

மூலகம் அல்லது சேர்வையிலுள்ள மூலகம் ஒன்றின் ஒட்சியேற்ற எண் குறையுமாயின் அது தாழ்த்தல் என்றும், அம் மூலகம் அல்லது சேர்வை ஒட்சியேற்றுங் கருவி எனவும் அழைக்கப்படும்.

*உ+ம்:*

$$H_2S + HNO_3 = S + NO$$

ஒட்சியேற்ற எண் -2 +5 0 +2

$H_2S$ இல் S இன் ஒட்சியேற்ற எண் -2 இலிருந்து 0 இற்கு அதிகரிக்கிறது. ஆகவே, $H_2S$ தாழ்த்தும் கருவி.

$HNO_3$ இல் N இன் ஒட்சியேற்ற எண் +5 இலிருந்து +2 இற்கு குறைகிறது. ஆகவே, $HNO_3$ ஒட்சியேற்றுங்கருவி.

### இலத்திரன்களின் அடிப்படையில் ஒட்சியேற்றம், தாழ்த்தலை விளக்குதல்.

அணு அல்லது அணுக்களைக் கொண்ட கூட்டம் ஒன்றினால் இலத்திரன்கள் இழக்கப்படுதல் ஒட்சியேற்றல் எனப்படும்.

அணு அல்லது அணுக்களைக் கொண்ட கூட்டம் ஒன்றினால் இலத்திரன்கள் ஏற்கப்படுதல் தாழ்த்தல் எனப்படும்.

இலத்திரன்களை இழக்கும் அணு அல்லது அணுக்களைக் கொண்ட கூட்டம் தாழ்த்தும் கருவி எனப்படும்.

எனவே, கூட்டம் I மூலகங்கள் அல்லது கார உலோகங்கள் சிறந்த தாழ்த்தும் கருவிகள் ஆகும். சீசியம் மிகச் சிறந்த தாழ்த்துங்கருவி ஆகும்.

இலத்திரன்களை ஏற்கும் அணு அல்லது அணுக்களைக் கொண்ட கூட்டம் ஒட்சியேற்றும் கருவி எனப்படும்.

எனவே, கூட்டம் VII மூலகங்கள் அல்லது அலசன்கள் சிறந்த ஒட்சியேற்றுங் கருவிகள் ஆகும். புளோரின் மிகச் சிறந்த ஒட்சியேற்றுங் கருவி ஆகும்.

*உ+ம்:* $Fe = Fe^{2+} + 2e$ (ஒட்சியேற்றம்)

தாழ்த்தும் கருவி

இலத்திரன்களை வலப்பக்கம் சேர்ப்பதன் மூலம் இரு பக்கமும் மொத்த ஏற்றங்களும் சமனாகும்.

$Cl_2 + 2e = 2Cl^-$ (தாழ்த்தல்)

ஒட்சியேற்றுங் கருவி

இலத்திரன்களை இடப்பக்கம் எழுதுவதன் மூலம் இரு பக்கமும் ஏற்றங்கள் சமனாகும்.

ஒட்சியேற்றமும் தாழ்த்தலும் ஒருங்கு நிகழ்கிறது. ஒட்சியேற்றத்தில் இழக்கப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கையும் தாழ்த்தலில் ஏற்கப்படும் இலத்திரன்களின் எண்ணிக்கையும் சமமாகும்.

ஐதரசன் சல்பைட்டு, நைத்திரிக்கமிலம் தாக்கத்துக் குரிய ஈடு செய்யப்பட்ட சமன்பாட்டினைப் பெறுதலூடாக நாம் மேலதிக விளக்கங்களைப் பெறலாம்.

### I. அயன் - இலத்திரன் அரைத்தாக்கமுறையில் இரசாயனச் சமன்பாடுகளை ஈடு செய்தல்.

1. ஒட்சியேற்ற நிலையில் மாற்றத்துக்கு உட்பட்ட மூலகங்களைக் கொண்ட தாக்கிகள், விளைவுகளை உள்ளடக்கிய பரும்படியான சமன்பாடொன்றை எழுதல்.

$$H_2S + HNO_3 \rightarrow NO + S$$

2. ஒட்சியேற்றுங் கருவிகள், தாழ்த்தும் கருவிகளை இனம் காணுதல்

$H_2S$ - தாழ்த்தும் கருவி

$HNO_3$ - ஒட்சியேற்றுங் கருவி

3. ஒட்சியேற்றுங்கருவிக்கான பகுதித் தாக்கம் ஒன்றை எழுதுதல்.

$HNO_3$ இலிருந்து போதியளவு $NO^-_3$ அயன்கள் பெறப்படுவதால், $NO^-_3$ அயன்கள் நைதரசன் ஒட்சைட்டாக தாழ்த்தப்படுகிறது என எழுதலாம்.

$NO^-_3 \rightarrow NO$

4. தாழ்த்தும் கருவிக்கான பகுதித் தாக்கம் ஒன்றை எழுதுதல்.

$H_2S$ அயனாக்கம் குறைவு. $S^{2-}$ அயன்களின் செறிவு மிகக் குறைவாக இருப்பதால், $H_2S$ என எழுதுவது விரும்பத்தக்கது.

$H_2S \rightarrow S$

5. (a) முதலாவது பகுதிச் சமன்பாட்டில் ஒட்சிசன் அணுக்களை ஈடுசெய்ய, வலது பக்கத்தில் இரு $H_2O$ ஐச் சேர்த்தல், Hஐ ஈடுசெய்ய இடது பக்கத்தில் நான்கு $H^+$ சேர்த்தல்.

$4H^+ + NO^-_3 \rightarrow NO + 2H_2O$

(b) இரண்டாவது பகுதித் தாக்கத்தில், வலது பக்கத்தில் $2H^+$ ஐ சேர்த்தல்.

$H_2S \rightarrow S + 2H^+$

6. (a) சமன்பாடு 5 (a) இல் இடது பக்கத்தில் நிகர ஏற்றம் +4 -1 = +3. வலதுபக்கத்தில் நிகர ஏற்றம் பூச்சியம். எனவே, மூன்று இலத்திரன்களை இடது பக்கம் சேர்க்க வேண்டும்.

$4H^+ + NO^-_3 + 3e \rightarrow NO + 2H_2O$

(b) சமன்பாடு 5(b) இல் இடது பக்கத்தில் நிகர ஏற்றம் பூச்சியம். வலது பக்கம் +2. எனவே, இரு இலத்திரன்களை வலதுபக்கம் சேர்க்க வேண்டும்.

$H_2S \rightarrow S + 2H^+ + 2e$

7. சமன்பாடு 6(a) ஐ இரண்டாலும், சமன் பாடு 6(b) ஐ மூன்றாலும் இலத்திரன்களை அகற்றக் கூடியதாகப் பெருக்குதல்.

(a) $8H^+ + 2NO^-_3 + 6e \rightarrow 2NO + 4H_2O$

(b) $3H_2S \rightarrow 3S + 6H^+ + 6e$

8. 7(a) ஐயும் 7(b) ஐயும் கூட்டல்.

$2H^+ + 2NO^-_3 + 3H_2S \rightarrow 2NO + 3S + 4H_2O$

இது ஈடு செய்யப்பட்ட அயன் சமன்பாடாகும். இரு பக்கங்களிலும் ஏற்றங்கள் சமனாகும்.

9. பூரணமான சமன்பாடொன்றையும் பெறமுடியும்.

$$\underset{(aq)}{2HNO_3} + \underset{(g)}{3H_2S} \rightarrow \underset{(g)}{2NO} + \underset{(s)}{3S} + \underset{(l)}{4H_2O}$$

கார அல்லது நடுநிலை ஊடகமொன்றில் தாக்கம் நிகழுமாயின், $H^+$ ஐ ஒத்த எண்ணிக்கையுடைய $OH^-$ அயன்களை இரு பக்கமும் சேர்த்தல்.

*உ+ம்:*

Al இற்கும் NaoH இற்கும் இடையே பரும்படியான தாக்கம்.

$$Al + NaOH \rightarrow NaAlO_2 + H_2$$

ஒட்சியேற்ற எண்: Al → 0, NaOH → +1, $NaAlO_2$ → +3, $H_2$ → 0

Al – தாழ்த்தும் கருவி; NaOH – ஒட்சியேற்றும் கருவி

தாழ்த்தும் கருவிக்கான அயன் - இலத்திரன் சமன்பாடொன்றைப் பெறல்.

$Al \rightarrow AlO^-_2$

$2H_2O + Al \rightarrow AlO^-_2 + 4H^+$

$2H_2O + Al + 4OH^- \rightarrow AlO^-_2 + \underbrace{4H^+ + 4OH^-}_{4H_2O}$

$Al + 4OH^- \rightarrow AlO^-_2 + 2H_2O$

ஏற்றங்களைச் சமப்படுத்தல்.

$Al + 4OH^- \rightarrow AlO^-_2 + 2H_2O + 3e$ ............ (1)

ஒட்சியேற்றும் கருவிக்கான அயன் - இலத்திரன் சமன்பாடொன்றைப் பெறல்.

$OH^- \rightarrow H_2$

$3H^+ + 0H^- \rightarrow H_2 + H_2O$

$\underbrace{3OH^- + 3H^+}_{3H_2O} + OH^- \rightarrow H_2 + H_2O + 3OH^-$

$2H_2O \rightarrow H_2 + 2OH^-$

ஏற்றங்களை சமப்படுத்தல்.

$2e + 2H_2O \rightarrow H_2 + 2OH^-$............................... (2)

(1) X 2 + (2) X 3,

$2\,Al + 2OH^- + 2H_2O \rightarrow 2AlO^-_2 + 3H_2$

பூரணமான சமன்பாடு

$2\,Al + 2NaOH + 2H_2O \rightarrow 2NaAlO_2 + 3H_2$

*- அடுத்த அத்தியாயமொன்றில் ஒட்சியேற்ற எண்மாற்ற முறை இடம்பெறும்.*

**வ.சி.சிவசுப்பிரமணியம்,**
உதவிக் கல்விப் பணிப்பாளர், (விஞ்ஞானம்),
வட-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம்.

ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

கெடுவான் கேடு நினைப்பான்.
- தமிழ்ப் பழமொழி.

# நமது நோக்கு

## எல்லை கடக்கும் சிதைவுப் பாதை

பொதுஜன ஐக்கிய முன்னணியின் - சமாதான முயற்சிகளுக்கு எதிரான வியூகங்களும் நடவடிக்கைகளும் தீவிரம்பெற்றுச் செல்கின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும் நிகழ்ச்சித் திட்டங்களில் - வேறெந்த விடயங்களையும் விட, சமாதான முயற்சிகளுக்கு எதிரான செயற்பாடுகளே முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளன.

இந்த வகையில் தன்னாலான எந்த எல்லையையும் தொட்டுவிடுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி முயன்று வருகின்றது.

இதன் ஒரு கட்டமாகவே - பொதுஜன ஐக்கிய முன்னணியின் தற்போதைய 'கதாநாயகர்களான' அனுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சரத் அமுனுகம ஆகியோரின் இந்தியாவுக்கான விஜயம் அமைந்துள்ளது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான அமைதி முயற்சிகளில் ஆரம்பம் முதலே - வெளிப்படையாகப் பட்டும் படாத போக்கையும், உள்ளே குறிப்பிடத்தக்க எதிர்ப்புணர்வுடனும் காணப்பட்ட இந்தியாவை, தனக்கேற்ற வகையில் பயன்படுத்தும் வகையிலேயே, இந்த விஜயத்தை - பொதுஜன ஐக்கிய முன்னணி கையாள்கின்றது என்பது வெளிப்படையானது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் - தென்னாசியப் பிராந்தியத்தில் வெளியாரின் ஊடுருவலை, பிராந்திய வல்லரசு என்ற ரீதியில் இந்தியா அனுமதிக்கமாட்டாது/விரும்ப மாட்டாது என்பதைத் தெரிந்து, அதனூடாக தனது புதிய காய்நகர்த்தலை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆரம்பித்திருக்கின்றது.

சமாதானத்திற்கான முயற்சிகளுக்கு எதிராக ஏற்கனவே நாடளாவிய ரீதியில் பல அரசியல் நகர்வுகளை ஜனாதிபதி சந்திரிகா மேற்கொண்டிருந்த போதும் - அவை சாதகமாக அமையாது பிசுபிசுத்துப்போன நிலையில்- இந்தியாவைச் சரணடையும் முயற்சியை, லக்ஷ்மன் கதிர்காமரின் வழிநடத்தலில், ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்திருக்கின்றார்.

இந்தியாவை இவ்விடயத்தில் பயன்படுத்திக் கொள்ள - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மூன்று வழிகள் காணப்படுகின்றன.

ஒன்று - நோர்வேயின் மத்தியஸ்தம் ஊடாக அமெரிக்காவின் செல்வாக்கு இலங்கைத் தீவில் பரவுவது பற்றி - இந்தியாவை உஷார்படுத்துவது.

இரண்டு - இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகள் சர்வதேச அரங்குகளில் நடைபெறும் மாநாடுகளில் பங்குபற்றுவதும் அங்கீகாரம் பெறுவதுமான விடயங்களில் - இந்தியக் கொள்கை வகுப்பாளர்களதும், உளவு நிறுவனங்களதும் கவனத்தை அதிகரிக்கச் செய்து - விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டினை இன்னும் தீவிரமாக்குவது.

மூன்று - இலங்கையின் வட-கிழக்குப் பகுதிகளின் ஆட்சியதிகாரம் பற்றிய அரசியல் தீர்வில், 'இந்தியாவின் ஒருமைப்பாட்டினது' அச்சுறுத்தல் பற்றிய மிகைப்படுத்தல்களை வளர்த்து விடுவது - என்பவையே மூன்று வழிகளுமாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும் இந்த நகர்வுகளை - இந்தியாவை எப்படியாவது சிக்கவைத்துவிட வேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினதும், லக்ஷ்மன் கதிர்காமரதும் எண்ணமாகும்.

இவற்றில் இந்தியா சிக்குகிறதோ இல்லையோ- எப்பாடுபட்டும், அமைதிக்கான வழியைச் சிதைத்துவிட வேண்டும் என்பதில் - ஜனாதிபதிக்கும், அவரது ஆலோசகர்களுக்கும், அவரது கட்சிக்கும் இருக்கும் 'பெருவிருப்பு' மட்டும் தெளிவாகவே தெரிகின்றது.

# ஒஸ்லோவில் முதல் நாள் பேச்சுக்கள் வாதப் பிரதிவாதங்களின்றி நடந்தன!

## முன்கூட்டியே திட்டமிட்டதாக சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

அரச-புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்கு இடையில் ஒஸ்லோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்கள், வாதப் பிரதிவாதங்களின்றி சுமுகமான சூழ்நிலையில் இடம்பெற்றதாக, நோர்வே விசேட சமாதானப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஒஸ்லோ பேச்சுக்களின் முதலாம் நாள் - வாதப் பிரதிவாதங்களையோ, பிரச்சினைகளையோ கிளப்பாமல் சுமுகமாக நடந்துகொள்வதென இருதரப்புக்களும் முன்கூட்டியே இணங்கியிருந்தன. அதன்படியே பேச்சுக்கள் சுமுகமாக நடந்தன.

இது ஒரு புகைப்படம் எடுக்கும் நிகழ்வு போலவே அமைந்தது. நாளை வியாழக்கிழமையே முரண்பாடுகளான விடயங்கள் குறித்துப் பேசப்படும். யுத்தநிறுத்தம் அதோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்தும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் இப்பேச்சுக்களில் ஆராயப்படும் என்றும் சொல்ஹெய்ம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# யாழ். விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் தென்பகுதி மாணவர்கள்

(ஆவரங்கால்)

சமாதான நல்லெண்ண முயற்சியின் பயனாக சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்த தென்பகுதி பாடசாலை மாணவர்கள், யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றுமுன்தினம், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரிக்குச் சென்ற இவர்கள், வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்துகொண்டதுடன் அச்சுவேலி திரேசா மகளிர் கல்லூரியிலும் போட்டியில் கலந்துகொண்டனர். இச்சமாதானச் சுற்றுலாவிற்கான ஏற்பாட்டினை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா மேற்கொண்டார்.

## யாழ்.போதனா வைத்தியசாலையில்

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மூன்று மாடிக் கட்டடம்!

(சரசாலை)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மூன்று மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

6 கோடி 50 லட்சம் ரூபா செலவில் இம்மூன்று மாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. சுகாதார அபிவிருத்தி அமைச்சர் தயாரத்ன, இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். இதற்கான பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள வசதிகள் போதாமையினாலும், அதிகளவு நோயாளர்களை இச்சிகிச்சைப் பிரிவில் உள்வாங்க முடியாமல் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(34)

# இந்தியாவை உஷார்படுத்தவே அனுரா குழு புதுடெல்கி சென்றது

## - லக்ஷ்மன் கதிர்காமர் சொல்கிறார் -

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடைபெறும் விடயங்கள் குறித்து இந்தியாவை உஷார்படுத்துவதற்கே, பொதுஜன ஐக்கிய முன்னணித் தூதுக் குழு இந்தியாவுக்குச் சென்றுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மிக நெருங்கிய நாடான இந்தியாவுடன் ஆழமான தொடர்புகள் இருக்கின்றன. எனவே இலங்கையின் சமாதானப் பேச்சுக்குறித்து கவனமாக இருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்படக் கூடிய அதிகாரப் பரவலாக்கம் தொடர்பாக இந்தியா கூடுதல் கவனம் எடுக்கும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயங்கள் தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்காக ஜனவரி மாதம் இந்தியாவுக்கு செல்லவுள்ளதாகவும் தெரிவித்த கதிர்காமர் - புலிகள் தம்மை அரசியல், இராஜதந்திர ரீதியாகப் பலப்படுத்திக் கொள்ள முனைவதாக, ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் பிளவு; அரசாங்கத்தைப் பாதிக்காது!

## என்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(ஒஸ்லோ)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள் அரசாங்கத்தை எந்த வகையிலும் பாதிக்காது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ரவூப் ஹக்கீம் - அதாவுல்லா பிரிவினருக்கிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையடுத்து, பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக ஒஸ்லோ சென்றிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம் நாடு திரும்பியுள்ளார். இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சினையே தவிர, அரசாங்கத்துக்குள் ஏற்பட்ட பிரச்சினையல்ல. கட்சிக்குள் பிளவு ஏற்பட்டதுமே அமைச்சர் ஹக்கீம் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளாமல் நாடு திரும்பியமை பிரச்சினைக்குரியதொன்றல்ல.

கட்சிக்குள் பிளவு தோன்றியதையடுத்து அமைச்சர் ஹக்கீமை நாடு திரும்புமாறு தானே அவருக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி யாழ்ப்பாணத்திலும் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இம்முறையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் மூன்று விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்களில், தற்போது நடைபெற்றுவரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படவுள்ளன.

இவ்விடைத்தாள் திருத்தும் பணிகள் இம்மாதம் 27 ஆம் திகதியிலிருந்து தை மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறும்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கான மூன்று மதிப்பீட்டு நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த முறையும் இவ்வாறு விடைத்தாள் திருத்தும் பணிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (லி)

# சைக்கிளை மாறி எடுத்த பொலிஸார் மீது தாக்குதல்

## -தாக்கியவர் பொலிஸ் நிலையத்தில்-

(கச்சாய்)

தவறுதலாக சைக்கிளை மாறி எடுத்துச்சென்ற சிவில் உடையில் வந்த பொலிஸாரைத் தாக்கிய நபரைப் பொலிஸார் பிடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - நேற்றுக் காலை சாவகச்சேரியில் வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளை ஒருவர் மாறி எடுக்கும்போது, அதனை அவதானித்த சைக்கிள் உரிமையாளர் சம்பந்தப்பட்டவரைக் கடுமையாகத் தாக்கினார். தாக்கிய பின்தான் அவர் ஒரு பொலிசார் எனத் தெரியவந்தது. எனினும் தான் திருடன் என நினைத்தே தாக்கியதாகப் பொலிசாருக்குத் தெரிவித்தபோதும் பொலிசார் அவரைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.(33)

# ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்த அனுராகுழு சந்திரிகாவின் விசேட செய்தியை வழங்கியது!

(புதுடெல்கி)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட செய்தியுடன் இந்தியாவிற்குச் சென்றுள்ள அனுரா பண்டாரநாயக்க தலைமையிலான தூதுக்குழு, நேற்றுமுன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை புதுடெல்கியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதி சந்திரிகா கொடுத்தனுப்பிய, பிரதமர் வாஜ்பாய்க்கான விசேட செய்தி ஜஸ்வந்த் சின்ஹாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

அத்துடன், இச்சந்திப்பின்போது சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கையை மறுபரீசீலனை செய்ய வேண்டும் என்றும் - இந்தியா ஒதுங்கியிருப்பது அதன் நலனுக்கு விரோதமானதெனவும் அனுரா தலைமையிலான பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் குழுவால் ஜஸ்வந்த் சின்ஹாவிற்கு தெரிவிக்கப்பட்டது.

இக்குழுவில் - அனுரா பண்டாரநாயக்க, சரத் அமுனுகம, மங்கள சமரவீர, நிமல் சிறிபால டீ சில்வா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

# எமது பகுதியில் ஆங்கிலமொழி வழியிலான கல்வி சமூகமயமாக சில வருடங்களாவது தேவை!

**புதிய கல்விச் சீர்திருத்தக் கட்டமைப்பில் இடம் பெறும் ஆங்கிலமொழி வழிக்கல்வி அமுலாக்கம் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியற்றுறைத் தலைவர் வி.பி. சிவநாதனுடனான நேர்காணல் இது.**

*கேள்வி:-* ஆங்கில மொழி மூலமாக எமக்கு ஏனைய பிரதேசங்களுடனான தொடர்புகள் கட்டியெழுப்பப்படும் என கருதுகின்றீர்களா?

*பதில்:-* ஆங்கில மொழியூடாக



வி.பி.சிவநாதன்

ஆங்கிலம் பேசும் நாடுகளுடன் தொடர்புகொள்ள முடியும். ஏனைய நாடுகளும் சர்வதேசத் தொடர்பை ஆங்கிலத்திலேயே மேற்கொள்கின்றன.

ஆங்கிலக்கல்வி மேற்கத்தேய விஞ்ஞான தொழில் நுட்ப அறிவை எமக்கு தராது இருந்தால், நாம் வாழ்க்கையில் முன்னேறி இருக்க மாட்டோம் எனச் சிலர் கூறுகின்றனர். அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். மேற்கத்தேய தொடர்பு ஆங்கிலேயரால் மாத்திரம் கிடைத்த தொன்றல்ல. அதற்கு முன்னரும் இந்தியாவுடன் மேற்கு நாட்டவருக்கு வர்த்தக தொடர்புகள் தரைமார்க்கமாக இருந்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

ஏன் நாம் ஐரோப்பியத் தொடர்பை டச்சு மொழி மூலமாக பெறவில்லையா? அவர்களும் 140 வருடங்களாக ஆட்சி செய்தனரே! இன்று டச்சு மொழி பேசுபவர்கள் இருக்கின்றார்களா? ஆங்கில மொழி போய், இனனொரு ஆட்சி மொழி வருமாயின், ஆங்கிலம் பேசுவதையும் அதில் கறபதையும் விட்டுவிட முடியுமில்லையா?

*கேள்வி:-* நவீன தொழில் நுட்பக் கருவிகளின் உள்வாங்கல்களுக்கும் ஆங்கிலமொழிப் பயன்பாட்டுக்கும் இடையிலான தொடர்பு பற்றி விளகக முடியுமா?

*பதில்:-* எழுத்தறிவு, உலக அறிவோடு நமது கலாசாரம், பண்பாடு பற்றிய தளங்களின் ஊடே எதுவும் உள்வாங்கப்படுகிறது. பல நவீன தொழிற்கருவிகள் பயன்பாட்டுக்கு வந்தபோதும் அவற்றின் பயன்பாட்டை அறிந்து கொள்வதற்கு ஆங்கிலம் பயன்படுத்தப்பட்டாலும், அதனை சரியான முறையில் மக்கள் பயன்படுத்திக் கொள்ள, வழக்கத்திற்குக் கொண்டுவர தாய்மொழியின் அவசியமும் வேண்டுவதாக உள்ளது. எனவே தாய்மொழியோடு ஆங்கில மொழியும் கலந்தே உள்வாங்கல் நடைபெறுகிறது எனச் சொல்லலாம்.

*கேள்வி:-* எமது உயர் பதவியை பெற்றுக் கொள்வதற்கு ஆங்கில மொழி எந்த வகையில் உதவும் என நினைக்கிறீர்கள்?

*பதில்:-* சுயமொழிக் கல்வியோடு கிராமிய மக்களின் குழந்தைகள் இலவசக் கல்வியூடாகவே உயர் கல்வி வரைக்கும் கற்று, நல்லாசிரியர்களாகவும, நல்ல நிர்வாகிகளாகவும், இன்று உயர் பதவிகளிலுள்ளனர். இவர்கள் ஆரம்பக்கல்வியையும் பல்கலைக்கழகக் கல்வியையும் தாய்மொழி மூலமே கற்றவர்கள் என எடுத்துக்கூற முடியும். இருந்தபோதும் விஞ்ஞான, மருத்துவ, பொறியியல் கல்வியைக் கற்க ஆங்கிலம் மிக முக்கியமாக இருந்தது. விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வியை ஆங்கில மொழி மூலமே கற்கவே முடிந்தது. எனவே உயர்கல்வியைக் கற்றுக்கொள்வதற்கு ஆங்கிலத்தின் துணையும் அவசியம் என்றே கூற முடியும்.

*கேள்வி:-* இன்றைய கல்விக் கடடமைப்பை, ஆங்கிலமொழி மூலம் அமுலாக்குவது பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* ஆம், இன்றைய நிலையில் ஆரம்பக் கல்வியையும், இடைநிலைக் கல்வியையும், உயர்கல்வியையும் ஆங்கிலமொழி வழிக்கல்வியாக்க வேண்டும் என்று வாதிடுபவர்களும் உள்ளனர். அதைச் சொல்பவர்கள் தமக்குள்ளேயே குழம்பிப் போயும் உள்ளனர். முதலில் நல்ல பொருளாதார வாழ்வுக்காக, சந்தை வாய்ப்புக்காக, ஆங்கிலமொழியைக் கற்க வேண்டுமா? எட்டுத்திக்கிலிருந்தும் எமக்கு நல்லவற்றைக் கொண்டு வருவதற்காக ஆங்கிலக் கல்வியை வலியுறுத்துகின்றோமா? உலகில் எந்தப் பாகத்திலும் போய்த் தொழில் புரிவதற்காக ஆங்கிலக் கல்வியை வலியுறுத்துகின்றோமா? அறிவை விருத்தி செய்யவா? மேற்குலக விஞ்ஞானத் தொழில் நுட்ப சிந்தனையை அறியவோ? ஆராய்ச்சி உதவி மொழியாக கற்க முயல்கின்றோமா? என்ற வினாக்களுக்கான விடைகள் சரியாக வரையறுக்கப்படவேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்திலேயே இன்றைய கல்விக் கட்டமைப்பை எந்த இலக்குக் கொண்டு ஆங்கில வழிக்கல்வி முறையாக மாற்றவேண்டும் என்பது தெளிவாகும்.

*கேள்வி:-* ஆங்கில மொழி மூலமாகவே கணினிக் கல்வியை மேம்படுதத முடியும் என நினைக்கின்றீர்களா?

*பதில்:-* இதனைக் கணினிப் பிரயோகத்தின்போதே உணர முடியும. உலக மொழிகளில் எதனை தேர்ந்தெடுத்து கணினியைப் பிரயோகிக்கப் போகிறீர்கள் என கணினியில் உள்ள வினாவிற்கு - நாம் ஆங்கிலத்தில் என்றும் விடையளித்து, ஆங்கிலத்தையே தேர்தெடுக்கின்றோம். ஏனெனில் உலக மொழிகளில் தெரிந்த மொழி அதுவே. இதிலிருந்து நன்கு தெரிகிறது கணினி மொழி ஆங்கிலத்திற்கு மாத்திரம் உரியதன்று என்பது. ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குரிய மொழிகள் ஊடாகவே கணினிப் பிரயோகத்தை மேற்கொள்வதையும் நாம் கருத்தில் எடுக்கவேண்டும்.

*கேள்வி:-* ஆங்கில மொழியின் முக்கியத்துவம் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* உலக மயமாக்கத்துடன் இசைந்து செல்லவும், பல விடயங்களையும் அறிந்து கொள்ளவும் ஆங்கிலமே உதவுகின்றது. ஒரு மொழியின் அவசியம் அதன் பயன்பாட்டுடன் தொடர்புடையது என்ற வகையில், நாம் அறிவியலை ஏற்பதற்கு ஆங்கில நூல்களே எம்மிடம் இருப்பதால் ஆங்கில மொழி எமக்கு முக்கியமானதாக உள்ளது.

*கேள்வி:-* அறிவியல் என்று எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?

*பதில்:-* ஆம், அறிவியல் என்பது தனித்து விஞ்ஞானத் தொழில்நுட்பம் மாத்திரந்தானா? எமது மூதாதையர் பற்றியும், எமது வரலாறு வழிவந்த எச்சங்கள் பற்றியும் அறிவது அறிவியல் இல்லையா? எனவே அறிவியல் என்பது பரந்துபட்டதே.

*கேள்வி:-* எமது வாழ்வியலை வளம்படுத்திக் கொள்ள ஆங்கில மொழி மூலமான கற்கை எந்த அளவிற்குச் சாதகமாக அமையும்?

*பதில்:-* ஆங்கிலந்தான் எமது வாழ்வை வளம்படுத்தும் என்று மாத்திரம் கூற முடியாது. நல்ல வாழ்வியல் விழுமியங்களை அறிய வேணடும். எமது இதிகாசம், இலக்கியங்கள் ஆகியவற்றில் கூறப்பட்ட விடயங்களையும், அதனூடாக எம் வாழ்வை வளம்படுத்திக் கொள்ள அறிய வேணடியவையும் பலவுள்ளன. அவற்றை ஏற்றுக்கொள்ள அவற்றை எல்லாம் நாம் கற்று - எமது பண்பாடு, கலாசாரத்துடன் ஒன்றிவாழத் தாய்மொழியைத் தெரிந்திருத்தல் அவசியமாகின்றது. என்னைப் பொறுத்தமட்டில்,




எமது சுயமொழி ஊடாகவே வாழ்க்கையின் பரிபூரண நிறைவைப் பெற்றுக்கொள்ளமுடியும். அத்தோடு, உலகின் ஏனைய மக்களால் பின்பற்றப்படும் நல்ல விழுமியங்களை அறிய ஆங்கிலம் தொடர்பு மொழியாகவும் உள்ளது.

*கேள்வி:-* மேலைத்தேய நாடுகளில் ஆங்கிலம் பெறும் செல்வாக்கு பற்றி விளக்க முடியுமா?

*பதில்:-* 1980 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் தவிர வேறெந்த மொழியும் தெரியாத பல இளைஞ்கள் ஐரோபபா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளுக்குச் சென்றனர். அவர்கள் அந்தந்த நாட்டுச் சூழலுக்கேற்ப இசைவாக்கம் பெற்றதால் விரைவாக அந்தந்த நாடுகளின் மொழிகளில் பேசப் பழகிக்கொண்டனர். அதனால் அவர்கள் எல்லோரும் ஆங்கில அறிவைப் பெற்றவர்கள் எனக் கூறுவதற்கும் இல்லை. அந்தந்த நாட்டுமொழியை, தொடர்பு மொழியாகப் பேசப் பழகிக் கொண்டனர். அவர்கள் மணஞ்செய்து, குழந்தைகளைப் பெற்று, அக்குழந்தைகளை அந்தந்த நாட்டு மொழிகளிலேயே கற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு - ஐரோப்பிய மொழிகளில் கற்போர் தமக்கு ஆங்கிலம் தெரியவல்லையே என்ற தாழ்வு மனப்பான்மை கொணட பிள்ளைகளாக இருக்கவல்லை. பிரெஞ்சு பேசும் பிள்ளைகளும், ஜேர்மன் மொழி பேசும் பிள்ளைகளும், டச்சு மொழி பேசும் பிள்ளைகளும் தாம் வாழும் நாட்டில் நல்வாழ்வு வாழ அந்தமொழி போதுமானதாக இருப்பதால், ஆங்கிலம் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. இப்பிள்ளைகளுடன் நாம் எம்மொழிகளில் தொடர்பைக் கட்டியெழுப்ப முடியும் என்பதே எமக்குரிய பிரச்சினையாகும்.

*கேள்வி:-* ஆங்கிலத்தை இடைநிலைக் கல்வியில் இருந்து அறிமுகம் செய்வதா, அல்லது ஆரம்பக் கல்வியில் இருந்து அறிமுகம் செய்வதா பொருத்தமானது?

*பதில்:-* ஆங்கிலத்தைக் கல்வி மொழியாக்க வேண்டுமாயின், அதை ஆரம்பக்கல்வியில் இருந்தே அறிமுகம் செய்வதே பொருத்தமானது. அதற்கான சமூகச் சூழலும் அவசியம். சமூகத்தின் பேச்சு மொழியாக தமிழ் இருக்கும்போது ஆங்கிலத்தில் ஆரம்பக்கல்வியை ஆரம்பிப்பதென்பதும் சிரமமானது. குழந்தைகள் பெற்றோருடனும், அயலவருடனும், நண்பர்களுடனும், சந்தைகளிலும் தமிழ்மொழியில் தொடர்புகளை மேற்கொண்டு, கல்வியை மாத்திரம் ஆங்கிலமொழியில் கற்பது மிகச் சிரமமானது. அவ்வாறான முயற்சி வெற்றியளிக்குமோ என்பது சந்தேகமே.

அத்துடன் பாடசாலையில் அதற்குப் பொருத்தமான ஆசிரியர்களை நாம் பெறுவதற்கும் சற்றுக் காலம் செல்லும். ஏனெனில், ஆசிரியர்களில் பெரும்பாலானோர் தமிழ்மொழி மூலம் கற்ற ஆசிரியர்களே. அவ்வாறான ஒரு சமூகக் கல்விச் சூழலை ஏற்படுத்த சில வருடங்களாவது எடுக்கும். ✳

நேர்காணல்
ப.இராஜேஸ்வரன்.

# மழைக் காலத்தில் கவனமாயிருக்க

பகுதி II

## நெருப்புக் காய்ச்சல்

1940-50களில் இது ஒரு உயிர் கொல்லி நோயாக விளங்கியது. தற்பொழுது, நவீன மருத்துவ முறைகளால் இதை முற்றாகக் கட்டுப்படுத்தக்கூடியதாகவுள்ளது. எனினும் மக்களின் சுகாதாரமற்ற பழக்கவழக்கங்களினால் அவ்வப்பொழுது பரவி, பலரது மரணத்திற்குக் காரணமாக அமைநது வருகின்றது.

இந்நோய்க்காரணி ஒரு வகை பற்றீரியா. இது நோயாளியின் மலத்திலிருந்து நீர் நிலைகளை அடைந்து, பின்பு எமது உணவையும், குடிநீரையும் வந்தடைகின்றது.

நெருப்புக்காய்ச்சலின் நோயரும்பு காலமானது 10 தொடக்கம் 14 நாட்கள் வரை வேறுபடலாம். நோய் ஆரம்பித்த முதலாவது கிழமையில்- காய்ச்சல், தாங்கமுடியாத தலையிடி, பசியின்மை, உடற்களைப்பு, மூட்டு நோ, தசைநோ, இருமல், தொண்டை அரிப்பு, மலச்சிக்கல் ஆகிய அறிகுறிகள் காணப்படும். இரண்டாவது கிழமையில் வயிற்றோட்டம், வயிற்று நோ, உடலில் மென்சிவப்பு நிறமான பருக்கள் ஆகியன காணப்படலாம். மூன்றாவது கிழமையில் நோய் அதன் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும். மலத்துடன் அதிகளவு குருதி வெளியேறலாம். குடலில் ஓட்டை, உடற்குழியினுள் குருதி தேங்குதல் போன்றனவும் காணப்படும். இந்நிலையில் கிருமி உடலின் பல அங்கங்களிற்கும் பரவிப் பாதிப்பை ஏற்படுத்தும். நோயாளி மனக் குழப்பத்திற்கு உள்ளாகி இருபபார. இதைத் தொடர்ந்து மரணம் சம்பவிக்கலாம்.

தகுந்த முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்வதன் மூலம் இவற்றால் ஏற்படும் உடற் தாக்கத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

# சில வழிமுறைகள்

### தடுப்பு முறைகள்

ஒரு நோய் மரணத்தை, உடல், மனத் தாக்கங்களை உண்டாக்குவது மட்டுமல்ல, அது ஒரு தொற்று நோயாகப் பெருகுமிடத்து, பாரிய சமூக, பொருளாதார நெருக்கடிகளிற்கும் காரணமாக அமையும். இவற்றைத் தவிர்க்க வேண்டுமாயின் 'வருமுன் காப்போம்' என்பதற்கமைய நோயைத் தடுக்கும் வழிமுறைகளைச் செயற்படுத்துவது அவசியமாகும்.



☆ கொதித்தாறிய நீரைப் பருகுதல், அந்நீரைக் கொண்டே வாயைக் கழுவுதல்.

☆ சமையல் பாத்திரங்களைத் தொற்று நீக்கிய பின் உபயோகித்தல்.

☆ சமைத்த உணவைக் கரப்பான், ஈ, போன்றவற்றின் தாக்கத்திற்கு உட்படாது மூடி வைத்தல்.

☆ ஈக்கள் பெருகும் குப்பை கூளங்களை எரித்தல்.

☆ பூச்சி கொல்லிகளைப் பாவிதது ஈர கரப்பான்களை அழித்தல்.

☆ திறந்த வெளியில் மலம் கழிப்பதை முற்றாக தவிர்த்தல்.

☆ மலசலகூடங்களைச் சுத்தமாக, ஈக்கள் மலத்தை அடையாதவாறு வைத்திருத்தல்.

☆ மலசலகூடங்கள் இல்லாத படசத்தில் மலம் கழித்ததன் பின் அதனை ஒரு பள்ளத்தில் இட்டு மூடிவிடல்.

☆ மலசலகூடத்திற்குச் சென்ற பினபும், உணவு தயாரிப்பதற்கு, பரிமாறுவதற்கு, உண்பதற்கு முன்பும் கைகளை சவர்க்காரம் இட்டு நன்கு கழுவுதல்.

☆ வீட்டையும், சூழலையும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் ஈக்கள், கரப்பான்கள் என்பவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

### பின்பற்ற வேண்டிய பிற நடைமுறைகள்

☆ இயன்றளவு வெளியே உணவு உண்பதை தவிர்த்தல்.

☆ தயாரித்த உணவுகளை உடனே உண்ணுதல்.

☆ பொது நீர் நிலைகளில் நீச்சல் அடிப்பதை, குளிப்பதைத் தவிர்த்தல்.

☆ சந்தர்ப்பம் கிடைக்குமிடத்து, பிறரிற்கு சுகாதார வழிமுறைகளையும் அவற்றைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும் தொறறு நோய்களின் ஆபத்தைப் பற்றியும் அறிவுறுத்த வேண்டும்.

☆ பாதுகாப்பு இல்லாத உணவு சாலைகள், மூடப்படாத உணவு பழங்கள், இனிப்புகள் போன்றவை விற்பனை செய்யப்படும் இடத்து, அதை அவ்விடத்து சுகாதார வைத்திய அதிகாரிக்கோ அல்லது பொது சுகாதார பரிசோதகருக்கோ அறிவிகக வேண்டும்.

☆ ஏதாவது நோய்க்கான குணம் குறிகள் தென்படுமிடத்து வைத்தியரை அணுகவும்.

### சூழல் பாதுகாப்பு முறைகள்

☆ கிணறுகளிற்கும், பாவனையிலுள்ள மற்றைய நீர்நிலைகளிற்கும் குளோரின் இடல்.

☆ தனிமனித சுத்தத்துடன், சுற்றாடல், வைத்தியசாலைகளை பொது இடங்கள் என்பவற்றின் சுத்தமும் பேணப்படல் வேண்டும்.

☆ கழிவுப் பொருட்களை முக்கியமாக வைத்தியசாலைக் கழிவுகளை சரியான முறையில் அகற்ற வேண்டும்.

மேற்கூறிய நடைமுறைகளை ஒரு சமுதாயத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் சேர்ந்து கடைப்பிடித்தால் மட்டுமே, நீரால் பரவும் இக் கொடிய தொற்றுநோய்களை நம் சமுதாயத்திலிருந்து நீக்கலாம். எனவே, 'வருமுன் காப்போம்'.

**அ.லதாகரன்**
**(4ஆம் வருடம்) மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்**

# பலஸ்தீன உணவுக் களஞ்சியம் இஸ்ரேலியப் படைகளால் அழிப்பு!



தகர்ந்து போயுள்ள உணவுக்களஞ்சியம்

(காஸா)

காஸா நகரிலுள்ள பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான உணவுக் களஞ்சியத்தினை இஸ்ரேலிய இராணுவம் அழித்துள்ளது. இதனால் இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர்களுக்கும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனானிற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவப் பெண் பேச்சாளர் - காஸா நகரின் உணவுக் களஞ்சியத்தின் இரண்டாம், மூன்றாம் மாடிகளில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் மறைந்திருந்ததாலேயே இத்தாக்குதலை தமது இராணுவத்தினர் மேற்கொள்ளவேண்டி இருந்தது எனக் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுகளின் களஞ்சியமே இஸ்ரேலியத் தாக்குதலுக்கு உட்பட்டதால், தாம் பெரிதும் வேதனை அடைவதாக கோபி அனான் கூறியுள்ளார். மேலும் இத்தாக்குதல் பற்றி இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் கூறும் கருத்தில் தமக்கு உடன்பாடு இல்லை எனவும் இஸ்ரேலிய அரசாங்கம் துரிதமாக முழு விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் எனவும் அனான் கோரியுள்ளார்.



முறுகல் தொடர்கின்றது

# சதாம் ஹுசைனின் வாசஸ்தலமும் ஆயுதப்பரிசோதகர்களால் சோதனை

(பாக்தாத்)

ஐக்கிய நாடுகள் ஆயுதப்பரிசோதகர்கள் சதாம் ஹுசைனின் வாசஸ்தலத்திலும் ஆயுதப் பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆயுதப் பரிசோதகர்களுக்கும் ஜனாதிபதி மாளிகை உத்தியோகத்தர்களுக்கும் இடையில் நடைபெற்ற ஏழு நிமிடப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், ஜனாதிபதி மாளிகையில் ஆயுதப்பரிசோதகர்கள் தமது பரிசோதனைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள், ஈராக் தம்மிடம் இருக்கும் பேரழிவு தரும் அணு, உயிரியல், இரசாயன ஆயுதங்களின் விபரங்களை வெளியிடவேண்டும் என ஐ.நா. மற்றும் அமெரிக்க அரசு ஆகியன கோரியிருந்தன. ஆனால் ஈராக் அரசாங்கமானது - தன்னிடம் பேரழிவு தரும் ஆயுதங்கள் எதுவும் இல்லை எனவும், தாம் அவ்வாறான ஆயுதங்கள் எவற்றினையும் கடந்த 4 வருடங்களில் உற்பத்தி செய்யவில்லை எனவும் கூறியுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் நடந்த ஆறு மணித்தியால பரிசோதனையின்போது, எவ்விதமான தடயங்களையும் தாம் பெறமுடியவில்லை என ஆயுதப்பரிசோதகர்கள் கூறுகின்றனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கின் கைத்தொழிற்சாலைகளைப் பரிசோதனை இடுவதற்குத் திட்டமிட்டிருந்தனர். அதேவேளை, ஆயுதப் பரிசோதகர்களும் ஈராக்கிடம் பேரழிவு தரும் ஆயுதங்கள் இல்லை எனக் கூறியுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ் கருத்து வெளியிடுகையில் - ஐக்கிய நாடுகள் மறுப்புத் தெரிவித்தாலும், ஈராக்கின் பேரழிவு தரும் ஆயுதங்களைக் களையாதுவிடின், தாம் ஈராக்குடன் யுத்தத்தினை தொடுக்கப் போவதாகக் கூறியுள்ளார். அதேவேளை, ஈராக் - ஆயுதப் பரிசோதனை முயற்சிகளுக்கு இதுவரை கொடுக்கும் ஆதரவு திருப்திகரமானதல்ல என அவர் மேலும் கூறியுள்ளார்.



ஈராக்கில் ஆயுதப் பரிசோதகர்கள்

# பாலியல் விளம்பரங்களின் தடையை சீனா நீக்கியது

சீன அரசாங்கம் நீண்டகாலம் விதித்திருந்த ஆணுறை போன்ற பாலியல் உபகரணங்களுக்கான விளம்பரத்தடையினை, அடுத்த வருடம் முதல் நீக்க உத்தேசித்துள்ளது. சீன அரசாங்க ஊடகங்களின் தகவல்களின் படி எயிட்ஸ் பரவுவதனைத் தடுப்பதற்காகவே மேற்படி விளம்பரத் தடையினை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.



பாலியல் உபகரணங்களின் விளம்பரத் தடையினை நீக்குவது தொடர்பாக உலக எயிட்ஸ தினத்தன்றே சீன அரசாங்கம் தனது கொள்கையினை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபை- சீனாவின் அரசாங்கத்திற்கு, இந்த தசாப்தத்தின் இறுதியில் 10 மில்லியன் சீன மக்கள் எயிட்ஸ் தொற்றுக்குள்ளாகி இருப்பார்கள் என எச்சரித்துள்ளது. பாலியல் நடவடிக்கைகளைத் தூண்டும் விளம்பரங்களை சீன அரசாங்கம் 1989ம் ஆண்டு முதல் தடைசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# புகைத்தல் விளம்பரங்கள் ஐரோப்பாவில் தடையாகும்

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் 2005ஆம் ஆண்டு முதல் புகையிலை



மற்றும் புகைத்தல் தொடர்பான விளம்பரங்களுக்குத் தடைவிதிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் பதினைந்தில், ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கின்ற பதின்மூன்று நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் கூடி இத்தீர்மானத்தினை எடுத்துள்ளனர்.

இத்தீர்மானத்திற்கமைய, ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி விளம்பரங்கள், இணையத்தள விளம்பரங்களில் புகைத்தல் தொடர்பான விளம்பரங்கள் தடை செய்யப்படவுள்ளன.

மேற்படி தீர்மானத்திற்கான பிரேரணைகளை, ஐரோப்பிய நாடுகள்-ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் கொண்டு வந்து , தற்போது தீர்மானம் நிறைவேற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்புதிய சட்டங்களின் பிரகாரம், புகையிலை மற்றும் சிகரட் நிறுவனங்கள் மறைமுக விளம்பரங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டு வருகின்றன. அந்த வகையில் சிகரட் மற்றும் புகையிலைக் கம்பனிகளது வியாபாரக் குறியினைக் கொண்ட புடவைகளையும், பட அஞசல் அட்டைகளையும், வெளியிட அவை தீர்மானித்துள்ளன.

# மும்பாய் பஸ் குண்டுவெடிப்பு இருவர் பலி; 10 பேர் படுகாயம்

மும்பாய் ரெயில்வே நிலையத்தின் அருகே பஸ்ஸில் குண்டு வெடித்ததினால் இரண்டு பொதுமக்கள் பலியானதுடன் பத்துப் பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பஸ்ஸின் பின் பகுதியிலேயே குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. பஸ்ஸின் சிதறல்கள் மூலமே அருகில் நின்ற பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

மேலும் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகிய பஸ், அதன் தரிப்பிடத்தில் பயணிகள் எவருமின்றி இருந்த போதும், பஸ்ஸிற்கு அருகில் நின்ற பொதுமக்களே சிதறல் துண்டுகள் மூலம் காயமடைந்துள்ளனர் என மும்பாய் வாசிகள் தெரிவித்துள்ளனர்.

மும்பாயில் இவ்வாறான குண்டுத தாக்குதலால் 1993ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருநூற்றைம்பது பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

காஸாவில் குறிவைக்கும் இஸ்ரேலியச் சிப்பாய்



## அல்கெய்டா உரிமைகோரியது

கென்யாவிலுள்ள இஸ்ரேலிய இரட்டைத் தாக்குதல்களைத் தாமே நடத்தியுள்ளதாக அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடைய அமைப்பு உரிமை கோரியுள்ளது. மேலும் இது தொடர்பான அறிக்கையில், ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல்களுக்கு முஸ்லீம் மக்கள் எவரும் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் Free Aceh Movement போராளிகள்



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# குடாநாட்டில் பஸ்சேவையை விஸ்தரிக்க முடியாத நிலை!

## யாழ்.சாலை முகாமையாளர் கவலை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பன்னிரண்டு பஸ் வண்டிகளை இராணுவத்தினர் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றை விட முப்பத்தெட்டு பஸ் வண்டிகள் பழுதடைந்து விட்டன. இந்த நிலையில் குடாநாட்டில் பஸ் சேவையை மேலும் விஸ்தரிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. இவ்வாறு யாழ். சாலையின் நடவடிக்கை முகாமையாளர் க.பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய போதே, மேற்படி தகவல்களை அவர் வெளியிட்டார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது மூன்று சாலைகளிலும் மொத்தம் 142 பஸ் வண்டிகள் உள்ளன. இவற்றில்104 பஸ் வண்டிகள் மட்டும் இயங்கக்கூடிய நிலையில் உள்ளன. இவற்றில் 12 பஸ் வண்டிகள் படையினரின் பாவனையில் உள்ளன. மிகுதியாக உள்ள 92 பஸ் வண்டிகள் மட்டுமே மக்களின் போக்குவரத்துக்காக சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றிலும் 33 பஸ்வண்டிகள் தினமும் பாடசாலைச் சேவைக்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மிகுதியாக உள்ள 59 பஸ்வண்டிகள் மட்டுமே பொது மக்களின் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் ஆள்ணிப்பற்றாக் குறை மிக அதிகமாக உள்ளது. தற்போதைய நிலையில், 114 நடத்துநர்களும் 93 சாரதிகளும் பற்றாக்குறையாக உள்ளனர். இவற்றை விட 81 இயந்திரம் திருத்துநர்களும் பற்றாக் குறையாக உள்ளனர்.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக தினசரி ஏழு அல்லது எட்டு பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி காரணங்களால் யாழ். குடாநாட்டில் முழுமையான போக்குவரத்துச் சேவையை மக்களுக்கு வழங்க முடியாமல் உள்ளது என்றும், எந்த விதமான புதிய போக்குவரத்துச் சேவைகளையும் மேற் கொள்ள முடியாத நிலை நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)



"என்னை யாரும் அசைக்க முடியாது!" - அமைச்சர் ஹக்கீம் நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

# நடைபாதை வியாபாரிகளுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன

## யாழ். மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



யாழ்.நகர மரக்கறிச் சந்தையிலிருந்து முனீஸ்வரன் வீதிப் பகுதிக்கு இடமாற்றப்பட்ட, நடைபாதை வியாபார நிலையத்திற்கு அருகில், மலசலகூட வசதியும், குடிநீர் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.நகர முதல்வர் செ.கந்தையன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் முனீஸ்வரன் வீதிப் பகுதியில் மட்டுமே நடைபாதை வியாபாரத்திற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. எனினும் நடைபாதை வியாபாரிகள் தமக்கு இப்பகுதியில் அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்தித் தரவில்லை என தெரிவித்தனர். இது குறித்து முதல்வர் செ.கந்தையனிடம் கேட்டபோது அங்கு மலசலகூட வசதியும், குடிநீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கத் தான் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும், முனீஸ்வரன் வீதிப் பகுதியில், நேற்றுமாலை வரை எதுவித குடிநீர் வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என நடைபாதை வியாபாரிகள் சிலர் தெரிவித்தனர். அத்துடன் அங்கு அமைக்கப்பட்டிருக்கும் மலசல கூடம், மறைப்புக்கள் எதுவுமின்றி திறந்த வெளியில் காட்சி தருவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (லி)

# டெங்கு பரப்பும் நுளம்பினம் குடாநாட்டிலும் பரவுகிறது?

(யாழ்ப்பாணம்)

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு இனங்கள் யாழ். குடாநாட்டில் பரவி வருகின்றன.

குடாநாட்டில் மேற்படி நுளம்புகளின் பெருக்கம் தொடர்பாக சுகாதாரத் திணைக்களம் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த மாதம் 22 ஆம் திகதி சுகாதாரத் திணைக்களத்தின் பூச்சியியல் உதவியாளர் சி.சிவமோகன் தலைமையிலான குழுவினர் சங்கானைப் பகுதிக்கு விஜயம் செய்தனர். அங்கு நடாத்திய பரிசோதனைகளின் போது டெங்குக் காய்ச்சலை உருவாக்கக்கூடிய 'ஈடிஸ்' இனத்தைச் சேர்ந்த நுளம்புகள் அப்பகுதியில் பெருக்கமடைந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மாதம் முதலாம் திகதி இதே பரிசோதனைக் குழுவினர் நெல்லியடிப் பகுதியில் நடாத்திய பரிசோதனைகளின் போதும் மேற்படி நுளம்பு இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மேற்படி நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## கனேடிய...

இதேவேளை, சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹொங்கொங் மற்றும் மக்காவ் பகுதிகளின் சுயாட்சித் தன்மை குறித்தும் நேற்று இரு தரப்பும் ஆராய்ந்தாக தெரிவிக்கப் படுகிறது.

இச்சந்திப்புக்களின் போது, தலைவர் பிரபாகரனின் உரை குறித்து விளக்கமளித்த அன்ரன் பாலசிங்கம், கனடா சமஷ்டி குறித்து ஆராய்ந்து தமது கருத்தை வெளியிடுவோம் என்றார்.

## முஸ்லிம்....

கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் எல்.எஸ்.அபேகுணவர்த்தன இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

உத்தரவின் பிரகாரம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதவி வகிப்பது தடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் உயர்பீடத்தின் கூட்டங்களைக் கூட்டுவது, உயர்பீட விவகாரங்களில் தலையிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தடை உத்தரவு எதிர்வரும் 13 ஆம் திகதி வரை அமுலில் இருக்கும்.

## புலிகளின்....

பீரிஸூம் கடந்த திங்கள் - இது குறித்து இரண்டு மணிநேரம் பேசினோம். கனேடியர்களுடன் இன்று (நேற்று) நாமிருவரும் கலந்துரையாடினோம்.

### வன்முறையை விரும்புபவர்களல்லர்.

நாம் வன்முறையைக் கைவிட வேண்டும் என்ற அமெரிக்க அரசின் கோரிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்த பாலசிங்கம், நாம் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மூலம் அனைத்து ஆயுத நடவடிக்கைகளையும் கைவிட்டு விட்டோம். இதை சர்வதேச கண்காணிப்புக்குழுவும் மேற்பார்வை செய்கிறது. அரசியல் வழியில் எம் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுமானால் நாம் ஏன் வன்முறைக்குத் திரும்ப வேண்டும். புலிகளின் போராட்டம் பயங்கரவாதம் என்ற ஆர்மிரேஜின் கருத்தை ஏற்க முடியாது. நாம் வன்முறைக்கு எதிரானவர்கள். ஒப்பந்தம் மூலம் நாம் எமது போர் நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளோம். நாம் இப்போது சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றியுள்ளோம். இப்பேச்சுக்கள் வெற்றி பெறும் என நம்புகிறோம். இதனால் நாம் அமெரிக்கா எதிர்பார்த்ததை விடக் கூடுதலாக அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்துள்ளோம். அரச படைகளின் வன்முறைக்கு எதிராகவே நாமும் வன்முறையை மேற்கொண்டோம். இப்போது இருதரப்பும் இதை ஓர் ஒழுங்கு முறையில் கைவிட்டு வருகிறோம். இதனால் வாய் வழியாக எம்மைக் குற்றஞ்சாட்டுவதில் எந்த அர்த்தமும் இல்லை.

### நாம் தனித்தேசிய இனம்

தமிழர்களுக்கு வரலாற்று ரீதியான தாயகம் உண்டு. நாம் சிறுபான்மையினர் இல்லை. நாமும் ஒரு தனித்துவமான இனக்குழுவினர். எமக்கென தனி மொழி, கலாசாரம், வரலாறு, பூர்வீக நிலம் என ஒரு தேசிய அடையாளம் இருக்கிறது. இது ஒரு தேசிய இனத்தின் அல்லது அதன் தாயக உருவாக்கலின் காரணி.

### சந்திரிகா அஞ்ச வேண்டியதில்லை

புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து சந்திரிகா அஞ்சத் தேவையில்லை. அரச நிறுவனங்கள் எமது கட்டுப்பாட்டுப பிரதேசங்களில் தொடர்ந்தும இயங்குகின்றன என அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

அவர் தனது செய்தியாளர் மாநாட்டின் போது, கண்காணிப்புக் குழுவின் பணி குறித்தும் பாராட்டினார்.

## பிராந்திய....

இச்செய்தியாளர் மாநாட்டில் , விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணாவும் உடனிருந்தனர்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்-

கடந்த பன்னிரெண்டு வருடங்களாக விடுதலைப் புலிகளின் நீதிமன்றங்களும், காவல்துறையும் செயற்பட்டு வருவதையும், வடகிழக்கில் 70 சதவீதமான நிலப் பரப்பைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கள நிலையில், பெருமளவு மக்கள் இப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் நிலையில், சமூக ஒழுங்கைக் காப்பதற்கும் அப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் குறிப்பிட்ட அமைப்புகள் தேவைப்பட்டதன் அவசியத்தையும் - நாம் பேச்சுக்களில் அரசாங்கத்தரப்பிற்கு எடுத்துக் கூறினோம்.

இந்தக் காவல்துறை நிலையங்கள் எப்போதும் இயங்கி வருகின்றன. குறிப்பாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசுடன் நாம் பேச்சுக்களை நடத்திய போது கூட, யாழ்ப்பாணத்தில் அச்சமயம் காவல்துறை நிலையங்கள் இயங்கிவந்தன. காவல்துறையினரால் பாதுகாப்பு நிலைக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி குமாரதுங்க ஏன் பார்க்கின்றார் என எனக்குத் தெரியவில்லை.

அண்மையில் எமது காவல் துறைக்குப் புதிய சீருடைகள் அளிக்கப்பட்டிருப்பதோடு, காவல்துறை நிலையங்கள் புதிதாகத் தோற்றம் பெறவும் செய்யப்பட்டுள்ளன. இதைத்தான் நாங்கள் செய்கிறோம். தொடர்ந்தும் காவல் பணிமனைகளை அமைத்து வருகிறோம். மட்டக்களப்பில், பழுகாமத்தில் காவல் பணிமனை ஒன்று திறந்து வைக்கப்பட்டிருப்பதை என்னுடன் கூட இருக்கும் கேணல் கருணா உறுதிப்படுத்துவார். நாங்கள் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் போது இது ஒரு புதிய விடயம் அல்ல என்பதை நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.

அங்கு மட்டுமல்ல, திருகோணமலையிலும் புதிய நீதிமன்றத்தையும், காவல் பணிமனைகளையும் அமைத்துள்ளோம். இந்தக் காவல் நிலையங்கள் சிங்கள மக்களுக்கு எவ்விதத்திலும் அச்சுறுத்தலாக அமைய மாட்டாது என்பதையும், அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இயங்கும் அரச, பொலிஸ் அமைப்பின் நிர்வாகத்தில் இவை எவ்விதத்திலும் தலையிடமாட்டாது என்பதையும் நாங்கள் உறுதியாக அரசாங்கத்திற்குக் கூறுகின்றோம்.

முஸ்லிம் மக்களுக்கும் இந்தக் காவல் பணிமனைகள் எவ்விதத்திலும் அச்சுறுத்தலாக இருக்காது.

இதைப்பற்றி நாங்கள் அரசாங்கத்தரப்புடன் கலந்துரையாடியுள்ளோம். சில ஊடகவியலாளர்களாலும், அரசியல்வாதிகளாலும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டு, சமாதான காலத்தில் விடுதலைப்புலிகள் தம்மைக் கட்டமைத்து வருவதாக சிங்கள மக்களுக்குச் சொல்லப்பட்டிருப்பதாக அரசாங்கத்தரப்பு கவலையுடன் தெரிவித்தது.

நாங்கள் பிராந்திய, சு[illegible] நிர்ணய அமைப்பை நோக்கும் போது- எமக்கென பிராந்தியக் காவல்துறை ஒன்றை வைத்திருப்போம். தற்போதுள்ள காவற்துறையானது- அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், சட்டரீதியாக பிராந்தியக் காவல் துறையாக உருப்பெறும் . அதுவரை, எமது பகுதிகளில் சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கு இத்தகைய நிர்வாகக் கட்டமைப்புக்கள் இயங்கியே ஆக வேண்டும் என்றும் கூறினார்.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.31 | 96.77 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.65 | 150.99 |
| 1 யூரோ | 95.70 | 96.82 |
| 1 சுவிஸ் பிராங் | 64.87 | 65.88 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.47 | 54.44 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.76 | 25.76 |

விடுமுறைக்கால கணனி வகுப்புக்கள்

உங்கள் பிள்ளைகளின் விடுமுறைக்காலத்தை பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள விடுமுறைக்கால கணனி வகுப்பில் இணைத்துக் கொள்ளுங்கள்





ஆரம்பம்
06.12.2002 - காலை 10.00

JAFFNA TECHNICAL INSTITUTE
No.07 Palaly Road, Jaffna.

N.A.லொட்ஜ்

யாழ்.நகரில்

அனைத்து வித வசதிகளடங்கிய அறைகளுடன் கூடிய விடுதிச் சேவைக்கு



N.A.லொட்ஜ்
இல.185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[ஆனந்தா ஜீவலறி மேல்மாடி] (057)

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.